gistered No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 24—No. 5

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 24 | கர வைகாசி 1951 மே | இதழ் 5

உள்ளுறை

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

முத்தையா முதலி தெரு, வேளாளதேனும்பேட்டை, சென்னை-6

மன்றல் அழைப்பு

தேவகோட்டை - திரு. மு. சோமசுந்தரம், B. A., B.Com., அவர்களுக்கு, திரு .கா. இராமநாதன், B.A., B.L., அவர்கள் புதல்வி - திருவளர்செல்வி - தெய்வயானையை, பள்ளத்தூரில் நாளது வைகாசி, உ-ம் நாள் (16 - 5 - '51) புதன்கிழமை காலை திருமணம் செய்வதால் அதற்குச் சமாஜ அன்பர்கள் யாவரும் இதனையே அழைப்பாக, தயவு செய்து பாவித்து வரவேண்டுமென்று சமாஜ முன்னைய செயலாளர் திரு. கா. இராமநாதன் அவர்கள் அழைக்கிறார்கள்.

சைவ சித்தாந்த மகாசமாஜ கோடை வகுப்பு

இவ்வாண்டு 16-5-51 முதல் 27-5-51ந் தேதிவரை இராமநாதபுர மாவட்டம் கோட்டையூர் புகைவண்டி நிலையத்திலிருந்து மூன்றுவது கல்லின்கண் உந்தூர்தி வசதியுள்ள கண்டனூர் வையக்கரை இயற்கை வனப்பு வாய்ந்த எழில்மிகு சோலைவனஞ்சூழ் கொடிக்கூடத்தில் நடைபெறும்.

16-5-51ந் தேதி மாலை 3 மணிக்கு, குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மெய்த்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் வையக்கரையில் வகுப்பினைத் தொடங்கி வைத்து மற்றைய நாட்களில் சித்தாந்த சாத்திரத்தைப் பற்றி விரிவுரைகளும் ஆற்றுவார்கள். திருவாளர்கள் : அண்ணாமலை நகர் - வித்வான் ஒளவை. சு. துரைசாமிபிள்ளை, லால்குடி - புலவர் அ. நடேச முதலியார், பள்ளத்தூர்-வழக்குரைஞர் கா. இராமநாதன் செட்டியார் ஆதிய பிற பெருமைக்குரிய பேரறிஞர்கள் ஆசிரியர்களாக அமர்ந்து வகுப்புக்களை நடத்தி வைப்பார்கள். சூத்திரம், திருவுந்தியார், சாத்திரம், திருமுறை, பொதுப்பொருள் என்ற தலைப்பின்கீழ் பாடத் திட்டங்கள் அமையும். மாணவர்கள் இந்நூல்களைக் கொணர்தல் பெரிதும் உபயோகமாயிருக்கும். வகுப்புத் தொடக்க முதல் இறுதிவரை தினந்தோறும் மாலை வேளையில் பல்வேறு சுற்றுப்புற ஊர்களில் நிகழவுள்ள சமய அரங்குகளில் திருவாளர்கள் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்., க. அரங்கசாமி முதலியார், பி. ஏ., திருப்புத்தூர் வட்ட அரசாங்க தாசில்தா G. கலியாணம், எம். ஏ., டி. எக்கான்., இராஜேஸ்வ

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 24	கர வைகாசி 1951 மே	இதழ் 5

"மலை விளக்கு"

(அ. தா. ப. திருஞானசம்பந்தம், திருவண்ணாமலை)

தண்ணார் தமிழோங்கும், இத்தாய்த் திருநாட்டிலே வாழும் மக்கள் - பண்டு தொட்டு இன்றுவரை, வழக்காற்றில் உள்ள பழமொழிகள் பற்பல. அவற்றுள்ளும், ஒரு பொருள் நன்றாகப் புறக்கண்ணிற்குத் தோற்றமளிக்கும் அளவில் நிற்பின், அதனைப் புலவர் குறிக்கும்பொழுது "குன்றின் மேலிட்ட விளக்கென" உள்ள தென்பர். பாமரராய் இருப்பினும், அவர்களும் "மலைமேல் விளக்கு ஏற்றினமாதிரி" எனக் கூறுவர். ஆகவே மலையும் - விளக்கும் ஒருங்குசேர்ந்து, தமிழ் மக்களிடத்திலே ஒரு தெளி பொருள் உண்மையை விளக்க உதாரணமாக அமைந்துள்ளது. அத்தகைய ஒரு பொருளில் இருந்து நாம் சற்று அதனை உருவகமாக அமைத்து, அதன் முகமாக ஒரு அரிய கருத்தைக் காணவேண்டியவர்களாய் உள்ளோம். அதனைப் பின்னர் ஆய்வோம்.

மலை, மிக மிக உயர்வுடையது என்பதைப் பல்லோரும் நமக்கு விளக்கிக் காட்டியுள்ளனர். அவற்றைச் சற்றுக் காண்போம்.

அளவு செய்தற்கு அரியதன் வடிவத்தின் அளவும் பலவகைப் பொருள்களையும், தன்னகத்தே உடையன

எது? எப்படிப்பட்ட வலிமை உடையவராயினும், அன்னாராலும் அசைக்கமுடியாத பொருள் எது? நெடுந் தூரத்தில் உள்ளாராலும், காணப்படுகின்ற உயர்ச்சியை உடையது எது? வானம் பொய்ப்பினும், தன்னைச் சார்ந்தார்க்குப் பொய்க்காது நீரை அளிப்பது எது?—மலை மலை அன்றோ! இத்துணை மேற்கூறிய சிறப்புகள் உடையதென, தொலை நோக்காடி (Telescope) கொண்டு அளந்து கூறுபவர் யார்? நன்னூல் என்னும் பனுவல் அளித்தப் பவனந்தி முனிவர்தான்.

அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வன்மையு மலைக்கே.

குவலயம் புகழ் அறநூலை அளித்த வள்ளுவப் பெருந்தகையார், மலையின் உயர்வை எவ்வெவற்றிற்கு உதாரணமாக அமைத்துக்கூறுகிறார் என்பதைக் காண்க! கண்டு இன்புறுக!

குடிப்பிறப்பால் மலைபோல் உயர்ந்தோரும், குன்றி மணியினளவும் இழிவைத் தரத்தக்க செய்கைகளைச் செய்வாரானால், முன்னிருந்த உயர்ச்சியை இழந்தும் எல்லோராலும் இகழ்ந்து பேசுதற்கிடமாய்த் தாழ்வடைவர் என்பதேயாம். குன்றிமணியினளவு—எள்ளளவென்றது போல ஒரு சிற்றளவு.

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

மெய்யுணர்ச்சியும், துறவும், ஒன்றினும் ஆசை இல்லாமை முதலிய நற்குணங்களாகிய மலையின் உச்சியில் ஏறித் தடுமாறாமல் நின்ற முனிவரது கோபம் நிற்கும் அளவு கணப்பொழுதேயானாலும் அக்கோபம் செய்யப்பட்டோரால் அதனைத் தடுக்கவே முடியாது. இதனால் பெரியோர்களுக்குக் கோபம் வரும்படி நடவாதிருத்தல்வேண்டும் என்பதே.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

இல்வாழ்க்கைக்கு விதித்த விதியினின்றும் மாறுபட்டுத் தீயவழிச் செல்லாமல், ஒருவன் அடங்குவானுனல், அவனுடைய உயர்ச்சி மலேயின் உயர்ச்சியைப் பார்க்கினும் மிகப் பெரியது என்பதே.

நிலேயிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலேயினு மாணப் பெரிது.

இதுவரை இலக்கியப் புலவர்கள் குன்றை - மலேயை ஆழ்ந்த அறிவும், பயன்தரத்தகுந்த பண்புகளும் நிறைந்த பெரியவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவதைக் கண்டோம். இனி சமயப் பயிரை வளர்க்க வந்த ஞானச் செல்வர்கள் கூற்றைப் பின்பற்றி, அவர் வழிவந்த அன்பர் ஒருவர் கூறும் கருத்துக்களேயும் இவண் சிறிது காண முயல்வோம்.

பொதுவாகத் தமிழ் மக்களிடம் " மலே விளக்கு " என்ருல், திருவிழா வகையில், திருவண்ணுமலேக் கார்த்திகை தீபத்தையே குறிப்பர். இதுவும் இக்கட்டுரையின் தலேப்பிற்கு மெத்தவும் பொருந்தும். தில்லேயில் இருந்து, ஞானத் தபோதனரை வா, வா என்றழைக்கும் அருள் அண்ணு மலேக்கு ஓர் அன்பர் போந்தார். அங்ஙனம் போந்து, அவ்வூர் மலேயைக் கண்டு, அதன் வண்ணத்தில் ஈடுபட்டார். பின் அதன் உயர்வைப் பேசுகிருர். அவர் யார்? அவர்தான் குகை நமசிவாயரிடம் உபதேசம் பெற்ற குருநமசிவாய சுவாமிகள். அவர் கண்ட மலேயின் நிலே எத்தனே கருத்துக்கள் பொதிந்தனவாக உள்ளன என்பதை நோக்குக!

அன்பர் பிறப்பை அகற்றியும், அன்பரல்லா, அன்பர் பிறப்பை வளர்த்தும், அன்பை வடித்தும், சிம்புள் பறவையாய் நின்று சிங்கத்தைத் தாக்கு மலே - அண்ணுமலே என்கிருர்.

அன்பர் பிறப்பை யகற்றுமலே யன்பரல்லா
வன்பர் பிறப்பை வளர்க்குமலே—யன்பை
வடிக்குமலே சிங்கத்தை வந்து சிம்புளாகி
யடிக்குமலே யண்ணுமலே.

ஆலகால நஞ்சு விரட்டியடிக்கிறதென வந்த, அமரர் களுக்கு, அடைக்கலம் தந்து, நஞ்சை உண்டு அவர்களேக்

காத்தமலை. நாலு வேதங்களையும் சமைத்து, நாயேனை ஆளக்குருவாகி வந்த மலை என, தன் குருவை மலைக்கே ஒப்பிட்டு ஒருமை கண்டு இன்புறுகிறார்.

ஓலமிடுந் தேவர்குழா முய்யத் திருமிடற்றி
லாலவிடந் தன்னை யடக்கும்மலை—நாலுமறை
யந்தமலை நாயேனை யாளக் குருவாகி
வந்தமலை அண்ணாமலை.

இங்ஙனமே நாடுதோறும் தோன்றியுள்ள மலைகட்கு மனத்திலே தோன்றிய பெருங் கருத்துக்களைப் புலவர்கள் உருவகமாக அமைத்துப் பா இயற்றிச் சென்றனர். இலக்கியப் புலவர்கள் கூறிய உதாரணம் சரியே. அவர்கள் குணங்களை மலைக்கு ஒப்பிட்டனர். ஆனால் நாம் கண்ட சமயப் பெரியார், குரு நமசிவாயர், மலைக்கன்றோ குணங்களை ஏற்றிக் கூறுகிறார் என எண்ணலாம். இதுவும் ஒரு நியாயம்பற்றியே இவ்விடத்தில் இடம் பெற்றுள்ளது. அண்ணாமலையை - ஓர் ஞானியெனக்கொண்டு, உட்பொருள் கருத்துக்களை ஆய்ந்து காணின் உண்மை விளங்குவதைக் காணலாம். இப்பொழுது மலையைத் திருத்தமாக உருவகம் செய்யவேண்டியுள்ளோம். யாருக்குச் செய்வது? அருமை, பெருமை வாய்ந்த குணங்கள் உடையவர்களுக்கன்றோ? அத்தகையோர் யார்? ஞானத் தபோதனர்களே யாவர். எனவே ஞானத் தபோதனர்கள் மலைக்கு இலக்காகிறார்கள் என்பது தேற்றம்.

இனி விளக்கு என்பது எதைக் குறிக்கிறது என்பதைக் காண்போம். விளக்கிக் காண்பிப்பது விளக்கு. எரியும் விளக்கு எதை விளக்கிக் காட்டுகிறது? இருளை விளக்கி ஒளியைக் காட்டுகிறது. அறிஞர் என்போர் ஒரு விளக்கி எனலாம் அல்லவா? எப்படி? அறியாத சொல்லை அறிந்து அழகாக அனைவரும் விரும்பிக் கேட்கும் படி அருமையாய்க் கூறுகிறார். அதனால் அவர் அறியாப் பெருஞ்சொல்லை விளக்குகிறார். எனவே, அவர் பெருஞ் சொல் விளக்கினார் எனப் புகழுரை பல கூட்டிப் பேசப்படுகிறார். வள்ளுவர் கண்ட விளக்கு எதைக் காட்டி விளக்கு

கிறது சான்றோர்க்கு ? பொய்யாமையைக் காட்டி விளக்கு கிறது. யாங்ஙனம் ?

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

சிவபெருமான் திருவடியைச் சிந்தித்து, திருப்பெருகு சிவஞானம் பெற்றுய்ந்த அப்ப மூர்த்திகள் விளக்கினை விளக்குவது காண்மின் ! அவர் விளக்கிக் காட்டும் விளக்கு கள் நான்கு. 1. இல்லக விளக்கு. 2. சொல்லக விளக்கு. 3. பல்லக விளக்கு. 4. நல்லக விளக்கு. நான்கு விளக்குகள் ஏற்றப்பட்டு, சுடர்விட்டு ஒளி நல்குவதைக் காண்கிறோம். அவற்றின் தன்மை, நிலை, வேலை இவற்றை அறியவேண்டு மல்லவா ? ஆம்! இல்லக விளக்கு இருள் கடிந்து, ஒளியை நல்கி இன்புறச் செய்கிறது. சொல்லக விளக்கு மனத்தின் கண் உள்ள அறியாமை என்ற இருளைப் போக்கி, அறிவை நல்கும் சோதி விளக்கது. பல்லக விளக்கு, பலருங்கண்டு இறைவன் நிலை தீத்தன்மையாய் உள்ளதென விளக்குவது ; பலருங் காணக் காட்சியை நல்குவது. பின் முடிவில் நல்லக விளக்கிற்கு வருவோம். அதுதான் காழிவேந்தர் கூறும் செம்பொருள். அப்பொருளாவது :—

" வேத நான்கினு மெய்ப் பொருளாவது
நாத நாமம் நமச்சி வாயவே "

நமச்சிவாய என்பதே " நல்ல விளக்கு " என்பது அப்பர் சுவாமிகளின் இன் கருத்து.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி, அல்லல் அறுத்து ஆனந்த மயமாக்கும் திருவாசகத்தேனை அளித்த மாணிக்கவாசகர் பெருமான் தம் திருவெம்பாவையில் விளக்கு நல்கும் சோதியை விளக்குவது காண்மின் !

" ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண் "

என்பதில், முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாயும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றி யனே. ஆதி - அந்தம் இல்லாத அரிய, பெரிய சோதியே என நாவார விளித்தழைக்கிறார். மணிமொழியார் சோதியைச் சிறப்பித்து, அதன் வழியாக அதற்கு துணையான விளக்கை மறைமுகமாக ஏற்றிப் போற்றுகிறார். விளக்கினின்றும் சுடர் நல்குவதே சோதி ஆதலால், சோதியைக் குறிக்கின் விளக்கினையும் குறித்ததே எனக் கொள்க. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுகிறதுபோல.

மீண்டும் அவர் சோதியைக் கூறும் சிலவிடங்களைக் காண்போம்.

" மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே "
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்.

வேதமு வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயி னார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயி னார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப் பொற்சுண்ண மிடித்து நாமே.

—திருப்பொற்சுண்ண - 20

என்ற பற்பல இடங்களில் இறைவன் சோதிவடிவினனாகக் காட்சியை நல்கும் திறத்தையே விளக்கிப் போந்துளார்.

உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறையோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே !

என்ற ஔவைப் பிராட்டியார் திருவாக்கை நியாயமன்ற சட்டமாக அமைத்துக்கொண்டு பார்ப்பின், தொண்டர் உள்ளத்து உறைபவன் இறைவனே ! அவர் உள்ளத்தை

இறைவன் சார்வதால், அவர்களும் இறைவன் தன்மைக்கே மாற்றங் கொள்கின்றனர். அறிவுத் தொண்டராகிய ஞானிகள், இறைவன் இன்படைப்பில் தோன்றிய இன் குழந்தைகள்தானே. அவர்கள் அறிவெல்லாம் சுடர்விட் டொளிரும் விளக்குமயமாகத் திகழ்கிறது என்பது தெளிவு.

மலை என்பது ஞானி; விளக்கு என்பது அவர்தம் சுடர்விட் டொளிரும் அறிவு. எனவே மலைவிளக்கு என்பது ஞானியின் தன் சுடர்விட்டு ஒளிரும் அறிவு என்பது தேற்றம். "ஒரு பெரிய ஞானி ஒரு மலை விளக்கே" (A Great saint is certainly a mountain light).

மேற்கண்ட உண்மையை விளக்க அதிகத் தெளி பொருள் விளக்கம் வேண்டுங்கொல்! இருப்பினும் பெருநிலைவாய்ந்த, சுடர்விட்டொளிரும் அறிவுக்கருவூலத்தை, தன்னகத்தே கொண்டுள்ள அவர்கள் நிலையைச் சற்றுக் காணும் முகமாகச் செல்வோம்.

சிறியோர் தம் ஒழுக்க நிலையினின்றும் தவறுவரேனும், ஏதோ ஒருவகையில் உய்தி பெறுவர். பெரியார் தம் நிலை தவறி வீழ்வாராயின் எவ்வகையிலும் உய்தி பெறமாட்டார். நின்ற நிலை தப்பி, இலேசான பொருள்கள் விரைவில் விழமாட்டா. வீழ்ந்தாலும் உய்ந்துகொள்ளும். ஏனைய கனமான பொருள்கள் உய்யமாட்டா என்பதாம். எனவே கனமொத்த பொருள் போல, தன் நிலையில் திரியாது வாழ்க்கை உடையவர்கள் ஞானிகளே. இக்கருத்தைக் குமரகுருபரசுவாமிகள் வாயிலாகக் காண்போம் :

மெலியார் விழினு மொருவாற்ரு னுய்ய
வலியார்மற் றென்றூனு முய்யார்—நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா லுய்யா பிற.

The weak though they fall will by some means survive; but the powerfull survive not by any means.
Light things do not fall from their place with a loud crash; but if they should fall, they would be saved, not so the others.

எனவே நிலையிற்றிரியாது, ஊழி பெயறினும் தான் பெயருது வாழ்பவர் ஞானவாரமுதருந்திய ஞானிகளாவர். அவர்கள் மலைவிளக்கிற்கு ஒப்புமை யாவர் என்பது முடிபு.

சூரியஞர் கோயில்

காஷ்மீரம்

தென்ஞட்டில் சைவசித்தாந்தம் மிகவும் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இதைப்போல் வட நாட்டில் எங்கும் கிடையாது. இதைப்பற்றிப் பிற மொழிகளிலும் அரிய நூல்கள் இல்லை. ஆனல் வட கோடியிலுள்ள காஷ்மீர் நாட்டில் சைவமுமுண்டு ; சித்தாந்த வளர்ச்சியுமுண்டு. 'காஷ்மீரத்துச் சித்தாந்தத்திற்கும் தென்நாட்டுச் சித்தாந்தத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. இருந்தாலும், வடநாட்டுப் பகுதிகளில் மற்றவற்றைப் பார்க்கிலும் காஷ்மீரம் மிகச் சிறந்தது எனலாம். பரத கண்டத்தை ஒற்றுமையாக்கிப் பிணைத்து இருப்பது சித்தாந்தம் என்று கூறவேண்டும். ஒரு மகத்தான வில்லின் வட முனையில் காஷ்மீரமும் தென் முனையில் தமிழ்நாடும் இருக்க, இவ்விரு முனைகளையும் இணைத்துப் பிடித்து இருப்பது சைவசித்தாந்தம் என்னும் அழியாத நாண் ஆகும். இதை மக்கள் நன்ருக அறிய வேண்டும்.

மேலும், தென்நாட்டில் தஞ்சையில் சூரியஞர் கோயில் என்ற ஓர் அருமையான ஆலயமுண்டு. அதுபோலவே, வடக்கே காஷ்மீரத்தில் ஒரு சூரியஞர் கோயில் உண்டு. வடநாட்டுச் சூரியஞர் கோயில் உலகப் பிரசித்திப்பெற்றது. அதனை மார்த்தாண்டர் கோயில் என்று சொல்லுவார்கள். இந்த இரண்டு கோயில்களுக்கும் இடையே மற்ருெரு சூரியஞர் கோயிலும் உண்டு. அது உத்கலம் என்னும் ஒரிசா நாட்டில் கடற்கரை ஓரமாக உள்ள கோஞரகம் என்ற கருங்கற் கோயில். இதுவும் மிகவும் பிரசித்தி பெற்றது. காஷ்மீரத்துக் கோயில் அழிந்து கிடக்கிறது. கோஞரக்

கோயிலும் அழிவுற்று இருக்கிறது. இவ்விரண்டும் அழிந்து போனபோதிலும் மிகவும் பிரகாசமாக விளங்குகின்றன. தென்நாட்டுச் சூரியனுர் கோயிலோ அழியவில்லை. ஆனுல் விளக்கமாக இல்லை. ஒரு சாதாரண மடத்தலைவனின் ஆட்சியில் இருக்கிறது. ஆகையால் உலகப் பிரசித்தி பெற வில்லை. பாதகண்டத்தில் இம்மூன்று கோயில்களே சிறந் தவை. ஒன்றிரண்டு வேறு கோயில்களும் சிறிய அளவில் இருக்கின்றன. அவைகளில் ஒன்று வடவிசாகையில் சீரா குளத்திற்கு அருகே உள்ள அரசவல்லி என்ற ஊரிலுள்ள சூரியநாராயணர் கோயில் ஆகும். இனி, காஷ்மீரத்துக் கோயிலைப்பற்றிச் சிறிது விரிவாகக் கூறுவோம்.

காஷ்மீரம் நமது நாட்டுச் சரித்திரத்தில் மிகவும் பேர் போனது. பெரிய வீரர்கள் ஆட்சி செய்த நாடு; பயங்கர மான போர்கள் நடந்த நாடு; நமது சமயங்களுக்கு மூலா தாரமான நாடு; அருங்கலைகள் வளர்த்துவந்த நாடு; நூல் ஆராய்ச்சியில் சிறந்த நாடு; இயற்கை அழகில் ஒப்பற்ற நாடு; நிலச் செழிப்பும் நீர்ச் செழிப்பும் வளம்பெற்ற நாடு. இப்படிப்பட்ட நாட்டைவேறுமக்கள் சும்மா விடுவார்களா? முகமதியர்கள் அந்நாட்டிற் புகுந்து அங்கிருந்த குடிகளைத் தம் வசப்படுத்திக் கொண்டார்கள். நூற்றுக்கு எண்பத் தைந்து பேர் மதம் மாறினுர்கள். இப்போதும் அமைதி இல்லாமல் கலகங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனுலும் நாட்டில் இருந்த பழைய சின்னங்கள் அழியவில்லை. பண் டைப் பெருமையை அவைகள் காட்டிக்கொண்டும் இருக் கின்றன. அவைகளில் ஒன்று மார்த்தாண்டர் கோயில் என்னும் சூரியனுர் கோயில் ஆகும்.

காஷ்மீர நாட்டில் அனந்தநாகம் என்ற இடத்திற்கு 6 கல் தொலைவிலே ஒரு பீடபூமியின் பேரில் இக்கோயில் அமர்ந்திருக்கிறது. கோயிலிலிருந்து ஒரு கல் சென்ருல் ஓர் அழகிய நீர் ஊற்றைக் காணலாம். இவ்வூற்றின் பெயர் மார்த்தாண்ட தீர்த்தம் என்பது. இத்தீர்த்தத்தில்தான் சூரியதேவன் தோன்றினதாக ஐதிகம். இதன் அருகில் இரண்டு சிறிய அழகிய கோயில்கள் உண்டு. யாத்திரை

செல்லும் மக்கள் இந்தத் தீர்த்தத்தில் நீராடி விட்டுத்தான் மேலே செல்லுவார்கள். பீடபூமியின் பேரில் அமர்ந்திருக்கும் கோயில் மிகப் பெரியது. அதன் வளைவிற்குள் 79 சிறிய ஆலயங்கள் உண்டு. ஆலயத்தின் பக்கங்களெல்லாம் வயல்களும் தோட்டங்களும் நிரம்பி இருக்கின்றன. இந்த இடத்தில் பண்டைய நாளில் ஒரு பெரிய நகாம் இருந்தது. இப்போதோ அந்நகரம் இருந்தஇடம் தெரியாமல் மறைந்து விட்டது. இக்கோயிலில் நின்று பார்த்தால் வெகு தொலைவிலே பனிமூடிய மலைத்தொடர்கள் காணப்படுகின்றன. அம்மலைகள் பீர்பஞ்சால சிகரங்கள் எனப்படும்.

காஷ்மீர சரித்திரத்தை கள்ஹணர் என்ற ஒரு வடமொழிக்கவி இராஜதரங்கினி என்ற நூலில் எழுதியிருக்கிறார். அது ஒரு சிறந்த நூல். அற்புதமான கதைகளைக் கொண்டது. தற்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அப்பதிப்பிற்குப் பிரதமர் நேருவும் முன்னுரை தந்திருக்கின்றார்கள். அந் நூலின்படி மார்த்தாண்டர் கோவிலை எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அந்நாட்டு வீர அரசன் ஒருவன் கட்டினதாகக் கூறப்பட்டுளது. அவ்வரசன் பெயர் லலிதாதித்திய முக்தாபீடன் என்பது. அவன் வீராவேசமும், போாவலும் கொண்டவன். அலெக்சாண்டர், நெப்போலியன் போல உலகமே தம் கொற்றக் கொடியின்கீழ் அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். அதற்காகப் பெரிய போர்களில் ஈடுபட்டான். கணக்கற்ற வெற்றிகளையும் கொண்டான்.

லலிதாதித்தியன் இளவரசனாய் இருந்தபோது காஷ்மீர நாடு மிகவும் தொல்லைப்பட்டு இருந்து, மேற்கே முகமது நபியின் சீடர்கள் போர்க்கோலம் கொண்டு கிரீஸ், பாரசிகம் முதலிய நாடுகளைச் சின்னாபின்னப் படுத்தினார்கள். காஷ்மீரத்தின் வடக்கிலும், மேற்கிலும், தெற்கிலும் படையெடுத்து வந்து சிந்து மூல்தான் முதலிய தேசங்களைப் பிடித்துவிட்டார்கள். இந்தியாவிலோ வலுவான அரசுகள் இருக்கவில்லை. அப்படிப்பட்ட சங்கடமான நிலையில் லலிதாதித்தியன் ஆட்சிக்கு வந்தான். உடனே தன் நாட்டை

ஒற்றுமைப் படுத்திவிட்டு தனக்குச் சகாயமாக சீன தேசத்து இராஜதந்திரி ஒருவனை அமைச்சனுகச் சேர்த்துக் கொண்டான். அது முதல் அவனுடைய புகழ் விரிந்தது. அடுத்திருந்த நாடுகளை யெல்லாம் தன்வசப்படுத்திக் கொண்டான். வட இந்தியா முழுவதும் அவன் கைக்குள் வந்து விட்டது.

லலிதாதித்தியன் சிற்பக்கலையில் ஆர்வம் கொண்டவன். வெளிநாடுகளிலிருந்து அளவற்ற திரவியங்களைக் கொண்டு வந்து தன் நாட்டை அலங்கரித்தான். மத்திய ஆசியாவி லிருந்து அருமையான சிற்பிகளைத் தருவித்தான். பாத கண்டத்திலும் கன்னேசி நாடு, வங்கநாடு இவைகளிலிருந்து சிற்பிகளைக் கூட்டிக்கொண்டு போய் ஆலயங்களைக் கட்டுவித் தான். அக்காலத்தில் மிகச் சிறந்தவை என்று சொல்லக் கூடிய சிற்பச் சிறப்புகளை யெல்லாம் ஒழுங்குபெற அமைத் தான். இந்தச் சிறப்புகளை மார்த்தாண்டர் கோயிலில் காணலாம்.

இக்கோயில் சிறப்புகளை மேல்நாட்டு அறிஞர்கள் கண்டு விட்டு மிகவும் வியந்து எழுதியிருக்கிருர்கள். கிரேக்க, ரோமன் சிற்பங்களோடு பாதநாட்டுச் சிற்பங்கள் அமைதி பெறும்படியாக இணைத்து இந்த இடத்திலே ஒருகலைக் கோயிலாக செய்யப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அருமை யான புனித இடத்தில்தான் காஷ்மீரத்து சைவசித்தாந்தம் புகழ்பெற்று இருந்தது.

ஆனுல் இந்த அற்புதச் செயலைச் செய்த அரசன் என்ன ஆனுன்? மற்ற பேராசை பெருமன்னர்கள் போலவே இவனும் திடீரென்று மறைந்தான். வடக்கே இமயமலைச் சிகரங்களுக்கு அப்பால் உள்ள திபேத்து, மங் கோலியா முதலிய நாடுகளைக் கைப்பற்றச் சென்ருன். பல வெற்றிகளையும் அடைந்தான். ஆனுல் கோபிப்பாலைவனத் தில் செல்லுகையில் குளிரும், வறட்சியும் தாங்காமல் இவனுடைய போர் வீரர்களும் இவனும் மடிந்ததாக ஊகிக் கிருர்கள். ஆனுல் காஷ்மீரத்துக் கலைஞர்களோ இவன்மடிய வில்லை என்றும் மகாமேரு பருவதத்தில் தேவர்களுடன்

வாழ்ந்து வருகின்ருன் என்றும் கூறுகிருர்கள். அப்படிப் பட்ட பெருமைபெற்ற அரசன் வைத்துவிட்டுச் சென்றிருக்கும் கலை அழகுகளை நாம் ஒரு முறையாவது கண்டுவிட்டு வரவேண்டாமா ?

சிவபுராணம்

(ஆரணி. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

திருவாசகத்தின் முதற்கண் உள்ள சிவபுராணத்தை ஆழ்ந்துநோக்காமல், சொற்போக்கில், நம் கருத்தைச் செலுத்தினும் அரும்பெரும் பொருளைக் காணலாம். அதனை அகவல் என்று சொல்லிச் சாதிக்க முயலும் வீணரு முளர். அது கலிவெண்பாவே என்பதில் ஐயமும் வேண்டா. கலிவெண்பாவன்ருயின், 'வாஅழ்க' 'வணங்ங்கிச்' 'சொல்லாஅ' 'காஅட்டி' என்று அளபெடுத்தல் வேண்டுவதின்று. வெண்டளை தட்டாமல் அமைதற் பொருட்டே அளபெடுத்தது, யாப்பறி புலவர்க்கு நன்கு விளங்கும். அரையாப் புடையார் நிறையாப் புணரார். குறை யாக் கற்போர் கொளுத்தினுங் கொள்ளமாட்டார். மேற் குறித்த அளபெடைகளைத் திருவாசகப் பதிப்புக்களுட் காண்டலரிது. இனி, வெளியிடுவோர் 'வணங்ங்கிக்' 'காஅட்டி' என்னும் இரண்டனையும் அளபெடையுருவத் தில் தோற்றுவிக்கக் கடவர். இச் சிவபுராணத்தின் ஈற்றடி நான்கினையும் தனி வெண்பாவாகக் கொண்டு, ஒரு புதிய ஆராய்ச்சி செய்துவிட்டதாகக் களிக்கின்றனர். அவர்தம் வெள்ளறிவிற்கு அது பெரியதோராராய்ச்சி முடிபு ஆக லாம். ஆயினும், கலிவெண்பா தோறும் ஈற்றடி முச்சீர்த்தா யிருக்கும் என்றும், அப்பாட்டின், ஈற்றடி நான்கும் முன்னடித் தொடர்பு பெருதிருப்பின், தனிவெண்பாவாக நிற்றல் கூடும். கூடினும், அதனைப் பிரித்து, வேறுபாட்டாக் கோடல் புலமைக்குரித்தன்று. நிற்க. இனி, அச்சிவபுராணத் துள்ள தொடர்களை அறிவாம்.

'நமச்சிவாய வாழ்க' என்பது தலைமைத் தொடர். இதனுள் 'வாழ்க' என்பது, 'நாதன்' என்பது நேர் முதற் சீராதலினால், ஒரு மாத்திரை நீட்டம் பெற்றுத் தளை தட்டலின் நீக்கமுற்றது. இம் முதற்றொடர் திருவைந்தெழுத்தினை வாழ்த்தியதை உணர்த்திற்று. திருவைந்தெழுத்தினை வாழ்த்துவதேன்? அதனை வாழ்த்துவது உயிர்களாகிய நாம் வாழ்தற் பொருட்டுமன்று. மற்று யாதோ காரணம் எனின், ஆசிரியரே திருச்சதகத்திற் குறித்தருளினார் அதற்குரிய முக்கிய காரணத்தினை. அதுதான், "பாழ்த்த பிறப்பறுத் திடுவான் யானும் உன்னைப் பரவுவன்" என்பது; அப்பரவலே வாழ்த்தல். திருவைந் தெழுத்து வாழ்தல் உயிர்க்கு வரும் பிறப்புத் துன்பத்தினைப் போக்கிப் பேரின் பத்தினையாக்கி வாழ்வித்தற்பொருட்டே என்பது, அதனை இடைவிடாது கணிப்போரே இனிதுணர்வர். பிறர் எட்டுணையும் அறியார்.

பொறிகளின் வேறாகத் தன்னைக் கண்ட ஆன்மா, அக்காட்சி நிலை பெறுமாறு அசத்தாயுள்ள பாசத்தை அசத்தென்றுகண்டு ஒருவுதலும், ஒருவியவழி உளதாய் நிற்கும் ஞானக்கண்ணினால், ஒருவிய தன் அறிவின் கண்ணே தனக்கு ஞேயமாகிய முதல்வனை நாடுதலும் ஆகிய இரண்டும், அக்காட்சியை நிலைபெறச் செய்து, அரன் கழல் சேராகிய சிவானந்த போகப் பயனைப் பயக்கும்படி செய்தற்கு முறையே முன்னதும் பின்னதுமான சாதனம் என்று, சிவஞானபோதத்தின் ஒன்பதாவது சூத்திரத்து முதலிரதிகரணப் பொருளாலறியலாம். அச்சாதகர்க்கு ஞானம் பிரகாசிக்கும். அது பிரகாசித்தலால் நிலைகூடும். அந்நிலை கூடினவர்களையும் வாதனாமலந்தாக்குதலுண்டு. அவ்வாசனையை நீக்கும் பயனை ஆக்குவது, திருவைந்தெழுத்தினைச் சுத்தமானதத்தால் (அறிவாற்) கணித்தல் என்றால், அதன் பெருமையை என்னென்று எவர் கூறவல்லார்? ஒருதலையாச் சாதிக்கக் கடவதாகிய திருவஞ்செழுத்தோதுதல் அந்நிலை கூடப் பெற்றவர்க் கன்றி மற்றவர்க்கு ஏலாது.

சுட்டறிவைக் கடந்து ஞானத்தால் ஞேயத்தைக் கண்டு எங்குந்தானாக நிட்டைகூடிய வழியும், தொன்றுதொட்டு வரும் ஏகதேசப் பழக்கம் பற்றிப், புறத்தே விடயத்திற் சென்று பற்றுவதாகிய தன் அறிவை அங்ஙனம் செல்ல ஒட்டாமல் மடக்கி, அகத்தே ஒருகுறியின்கண் நிறுத்தி, நிட்டைகூடி நிற்கும் முறைமையை அஞ்செழுத்து ஓதும் முறைமையில் வைத்துக்கண்டு, சிந்திக்கச் சிந்திக்கச் சிவ தரிசனத்தை விளக்கி வாதனை வயத்தாற் புறத்திற் சென்று பற்றும் ஏகதேசவறிவைப் பற்றறத் துடைத்துப் பூரண நிலையிற் கொண்டு செல்லும். செல்வதால், அது வாசனா மலம் போக்குதற்குரிய சிறந்த சாதனமாதல் தெளியலாம். ஆகவே, நமக்கு அத்துணைப் பேருதவி புரியும் அத்திரு வைந்தெழுத்தினை வாழ்த்துவதினும் வேறு தொழில் நமக் குளதோ? நமக்குற்ற அத்தொழிலை விட்டு உறாத தீய தொழிலைப் புரிந்து, பிறவிவலையிற் பட்டுழல்கின்றோம். திரு விடைமருதூர் மும்மணிக்கோவை (கூ)ப்பாட்டின்கண்,

" மந்திர வெழுந்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை யன்றோ "

என்றருளியது காண்க.

இத்திருவைந்தெழுத்து அவரவர் நிற்குமுறைக்கேற்ப வோது முறையால் வேறுபடும். படவே, 'நமச்சிவாய' என்பது எங்ஙனம் நிற்கு முறைக்கு ஓதுமுறையாம் என்ற வினா எழும். இது தூலபஞ்சாக்கரம். இதனை ஓதுவார் பிரவிர்த்திமார்க்கத்தி னீங்காதார். நிவிர்த்தியை நாடாதவர் இதனை ஓதுவரேல், தம் நிலைக்கு மாறாகும். அது நாடுவார் சூக்கும பஞ்சாக்கரத்தை யோதுதல் வேண்டும். அவர் தனித்தனி, 'நானேயே தவஞ் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்' என்று இன்புறலாம். நிவிர்த்தி நாட்டத்தா ராய்ப் பிரவிர்த்தியி னீங்கினார்க்குரிய சூக்கும பஞ்சாக்கரத் துள், மலநீங்கிய நிலையர்க்குரியவை முதன் மூன்றுமே. அம் மூன்றும் சுத்தாவத்தையிற் சாக்கிரத்திற் கணித்தற்குரியன.

சிவயோகியர்க்கு முதலெழுத்து ஒன்றே கணித்தற்குரியது. ஞானயோகியர்க்கு முன்னீரெழுத்தும் கணித்தற்குரியன. இவ்வுண்மை திருமுறையோதுவார்க்கும் அரிதின் விளங்கு வது. இத்திருவைந்தெழுத்தினைக் கணிப்பாரே நாதன்றாள் (திருவடி)களை உணர்வர். அவர் நெஞ்சிற்றான் இமைப் பொழுதும் நீங்காதிருக்கும் அவை. அவற்றை அறியுங் காலமே குருபதேசகாலம். அக்காலத்தில்தான் ஆகமமாகி நின்று அண்ணிப்பான் இறைவன். மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து மனத்திடை மன்னுவான் மன்னன். அப்பொழுதே அவனது ஏகத்துவம் அநேகத்துவம் இறைமை நன்கு விளங்கும். அவ்விளக்கத்தின் பயனாக வேகங் கெட்டதும் ஆட்பட்டதும் ஆள்வோனும் கண் கூடாம். பிறப்பற்றதும் பிறங்கும்.

இவ்வாறு அகத்தாரல்லாத உயிர்க்கு அவ்விறைவன் சேயனாதல் பற்றி இரக்கந் தோன்றும். கைகூப்பி வணங்கி வாயார வாழ்த்திச் சித்தமார நினைப்பார்க்கு அண்மையனாய் உள்மகிழும் ஆண்டவனை - வணங்கிய தலையரை நிமிர்த்தி யாட்கொள்ளும். சீரோனை உடையானும் அம்மையப்பனும் பேரொளியனும் மங்கல குணத்தனும் அவனே என்று அவனது ஞானத்தை அபேதமாக வைத்து, அன்பின் பெருக்கால் போற்றிச் செய்யலாகும். ஆராத இன்பமலை வாராத சிந்தையுள் வந்துநின்ற பேராச்சரியம் புலப்படும். புலப்பட்டதும் அவனருளாலென்றுணரும். அவ்வருளாலே வணங்கத் தொடங்கி மனமகிழ இச் சிவபுராணத்தைச் சொல்லும்.

சிவபுராணத்தைச் சொல்லச் செய்வது திருவருளே என்றுணர்த்துவாராகிய மாணிக்கவாசகர் (அவனருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை முந்தைவினை முழுதுமோயவுரைப்பன் யான்)என்றருளி நில் லாமல் முன்னர் அத்திருவருளையே ஆறுமுறை வாழ்த்தும் ஐந்துமுறை வெற்றி யொலித்தும் (ஜயகோடம்புரிந்தும்) எட்டுமுறை போற்றி செய்தும் முறையே அத்திருவருளி னது ஷாட்குண்யத்தையும் பஞ்சகிருத்தியத்தையும் அஷ்ட

பூர்த்தத்துவத்தையும் குறித்தருளினுர். இவ்வுண்மை நம் 'ஞானசம்பந்தம்' ஒன்றனிலும் எழுதியுள்ளேன்.

திருவருளை வாழ்த்தியும் வெற்றியொலி செய்தும் போற்றியும் சிந்தித்து, வாழ்வும் வெற்றியும் போற்றலும் அடைவார்க்கு, வேகங் கெடுதலும், சிவனுக்கு ஆட்படலும், ஓங்குதலும் மாயப்பிறப்பறுதலும் கேயத்தில் நிமலன் நிலைத்தலும், ஆண்டவன் ஞானப் பெருந்துறையிற் குருதேவனுகி வந்து உபதேசிக்கப் பெறுதலும், அப் பெறலரும்பேற்ருல், ஆராத இன்பம் ஆர அருளைப் பெறலும் எளியன. அவ்வாறடையார்க்கு ஆண்டவன் அவருள் மகிழுங் சோனுயிராது சேயோனுதலும், தாம் அவனதருளகத்தாராயாகாமல் புறத்தாராதலும், பிறப்பிறவின்றி மாயையுட்பட்டுத் தீராத துன்பம் செறிதலும் எளிய. அவர்க்கு இச்சிவபுராணத்தால் சிந்தைமகிழாது. முந்தைவினை முழுதுமோயாது.

இவ்விரு வேறு நிலையும் உணர்ந்து, காமுஞ்சிரமுங் குவிந்து நிற்றல் அறிஞர் கடன்.

கண்ணுதலான் கருணைக்கண் காட்ட அடியார்க்கு எண்ணுதற் கெட்டாத எழிலார் கழல் வந்தெய்தும். எய்திய அதனை இறைஞ்சுக. அது விண்ணும் மண்ணும் நிறைந்து மிகுந்து விளங்கும் ஒளி. எண்ணும் கடந்தது. எல்லையும் இல்லாதது. அதனைப் புகழ்தற்கியலாதவாறு, அறியாமையை ஆக்கும். பொல்லா வினையை நீக்கும் அத்திருவருளைக் காண எத்தனையோ பிறவிகளில் தவஞ்செய்திருத்தல் வேண்டும்.

புல், பூடு, புழு. மரம், பல் விருகம், பறவை, பாம்பு, கல், மனிதர், பேய், கணங்கள், வல் அசுரர், முனிவர், தேவர் எனச் செல்கின்ற இயங்குதிணையும் நிலைத்திணையும் ஆகிய எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துப்போய் எம்பெருமானே துணை எனப்பற்றியவர்க்கே அத்திருவருட் காட்சி மெய்யாக் கிடைக்கும்.

அன்பு நெறி

ப. தாண்டவராயன், திருவண்ணாமலை.

அன்பினால் நடக்குந் தொழில்களைக் கண்ணால் காணலாம். ஆனால் அன்பு, கண்கொண்டு காணும் பொருள் அல்ல ; கருத்தாலறியத்தக்க பொருள். அன்பு, உள்ளத்தில் தோன்றும் நயம். அந்த நயத்தை ஈரமென்று உரைப்பர். "ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம் நீர்மேலெழுத்துக்கு நேர்" "இன் சொலால், ஈரம் அளைஇ, படிறிலவாம், செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்". இவ்விரண்டிடங்களிலும் ஈரமென்றது அன்பை அல்லவா? யாதில்லையாயினும், அன்பொன்றை மாத்திரம் ஒருவருடையரேல், அவர் இவ்வுலகத்தே யெல்லாச் சிறப்பும் எய்துவர்.

சில பெரிய வீடுகளில் வயது முதிர்ந்த குற்றேவலாளர்களைக் காண்கின்றோம். அவருள் சிலர் மிகப் பேதையர்களாகவுங் காண்கின்றனர். எந்த வேலைகளையும் திறமையாகச் செய்யவும் கூடாதவர். ஆனால் அறிவுடைப் பெருஞ்செல்வர்கள் அவர்களை சிலசமயம், மடமை நோக்கி வெறுத்தாலும், நீக்கிவிடுவதில்லை ; ஆயுளளவும் வைத்து காக்கிறார்கள்; அவர்கள் மக்களுக்கும் அவ்வீட்டில் வேலை கிடைக்கின்றது. சில புத்திசாலிகளான வேலைக்காரர்களையும் பார்க்கின்றோம். எதையும் திறம்படச் செய்யவல்லவர்களாகவும் உளர். ஆனால் அவர்கள் நீக்கமற நினைக்கின்ற பரிபூர்ண மூர்த்திகளாக, ஒரு நாளைக்கொரு வீட்டில் காட்சியளிக்கின்றனர். பேதை மக்கள் பெரிய இடங்களுக்கும் சொந்தமாகின்றனர்; சமர்த்தர் நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாமலு மிருக்கின்றனர்.

இதுதான் அன்பின் பெருமை. முன்னவர் அன்புடையவர். பின்னவர், அஃதில்லாதவர். அன்பற்ற, அறிவுடையோன் உயர்வதற்கு வழியில்லை. அன்பு மக்களை மட்டும் பிணிப்பதல்ல; கடவுளையும் பிணிக்கவல்லது. "பக்தி வலையில் படுவோன் காண்க"—மணிவாசகர். "மலர்மிசை ஏகினான்"—வள்ளுவர். அன்பில்லாதவர் எவ்வளவு வல்லவராயினும், என்னென்ன செய்யினும் கடவுள் அருளைப்பெற முடியாது. "என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டும்

பொன்போற் கனலிடைப் பொரியவறுப்பினும் அன்போ டுருகி அகங்குழைவார்க் கல்லால் என்பொன் மணியினை யெய்த வொண்ணுதே "—திருமூலர். அன்பிற்குத் தூரமு மில்லை; சமீபமுமில்லை. உலகம் போற்றும் செம்மலை, துறந்தா ரிற் தூய்மை உடைய பெருமகனை, நம் சாந்தவடிவான காந்தி அடிகளை, ஒரு நாட்டான், ஒரு மொழியான், ஒரு மதத்தான், ஒரு தொழிலாளனே சுடவுந்துணிந்தான். அத்துயர் கேட்ட, அயல்நாட்டு, அயல்மொழி, அயல்மதப் பெருமகன், "அம் மவோ? நல்லவராக நிற்றலிவ்வளவு துன்பத்திற்கிடமோ" வெனப்பெருமூச்செறிந்து, அயர்ந்தனன். யாவருமறிவோம். கதையல்ல! "புணர்ச்சிப் பழகுதல் வேண்டா வுணர்ச்சி தான் நட்பாம் கிழமைதரும்" என்ற வாய்மையை இங்கு உன்ன வேண்டாவோ?

உறவினரிலும், அன்பற்றவர் பகைவராவர். வேற்றுவ ரிலும் அன்புற்றவர் நலம்புரிவர். "உற்ருருடன் பிறந்தார் என்றிருக்க வேண்டாவுடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும், அம் மருந்துபோல் வாரும் உண்டு" என்ற மூதுரை இதற்கு எவ்வளவு ஆதாவளிக்கின்றது? இவ்வகையால் அன்பற்ற வாழ்க்கை சிறிதும் இன்பமில்லாதது என அறிகின்ருே மல்லவா?

அன்பை நாம் எப்படி பெறுகின்ருேம்? ஈரம்படிந்த நிலத்தில் முளைத்தெழும் புற்பூண்டுகளைப் போல மக்களுள் ளம், இளமையில் முதன் முதலாக உலகத்தின் சாயல் படிகின்ற காலத்தே பற்பல எண்ணங்களைக் காணுகின்றது. அவ்வெண்ணங்களுக்கு வித்து பழைய கருத்துக்கள். ஈரம் உலகியல் காட்சியாக மிளிரும் அருட்டிறம். அவ்வெண் ணங்களில் பயனுடைய எண்ணங்கள் நற்பயிரையும், ஏனைய வைகளையும் ஒக்கும். இக்களைகளை யாய்ந்து, களைந்து, நல்ல எண்ணங்களை நாளும் வளர்க்க முற்படவேண்டும். இவை, நல்ல அறிவுரைகளையே உணவாக வுண்டு வளர்கின்றன. "நன் சொற்கள் தந்து, என்னை நாளும் வளர்த்த தந்தை" எனக் கம்பர் கூறுகிருர்.

இந்நல்லுறவை ஊட்டி நல்லெண்ணங்களை வளர்க்க வேண்டுவது தந்தையின் கடமை. இந் நல்லெண்ணங்களிற் தலையாய அன்பை வளர்த்தற்கு, இல்லறம், ஒரு நல்ல கலைக் கூடமாகவுதவுகிறது. ஓர் இளைஞன் மனம் தனித்துள்ள போது எவ்வளவு கிடைத்தாலும், தானுண்ணுவதற்குந், தான்வசிப்பதற்குந், தான் அணிவதற்குமே செலவுசெய்ய ஒருப்படுகின்றது. மணமுடித்த பிறகோ, அவன் தன் நலங்களை மிகவும் சுருக்கிக் கொண்டு, மனைவியின் நலத் திற்கே செலவு செய்கிறான். பல பெண்மணிகள் கண வனை யூட்டி அணிவித்து உபசரிப்பதுண்டு. சில மடவார் தாமுண்ணும் பொழுது தாராளத்தையும், கணவனுக்குப் படைக்கும் பொழுது, சிக்கனத்தையும் கையாளுவதுண்டு. இருப்பினும் அன்பு நலத்தில், அவனுக்கு வேற்றுமை தோன்றுவதில்லை. தன்வரை முகிழ்த்துக் கிடந்த அன்பு முளை, இப்போது கொடியாகப் படர்ந்து மனைவியையும், வளைத்துத் தழைத்து, இருவரையும் ஒருவரெனச் செய்த தன்றோ ?

இனி, புதல்வர்ப்பேற்றை அடைந்த பிறகு இதன் படர்ச்சியாகவும் பெருகுகிறது. மக்களைப் பெறுவதற்குமுன் இது காதல் என்ற பெயராலேயே வழங்குகின்றது. பிறகு, அன்பெனப் பெயர் பெறுகிறது. அன்பான பிறகே விருந்தோம்புதற்கு உரியவராகின்றோம். அன்புமிக்க இல் லறத்தானை, அறிவுமிக்க நல்லறத்தார் யாவரும் அணுகுவர். இவன் யாவர்க்கும் ஆவனபுரிய கடப்பாடுடையவனாவன். "இல்லோ ரிரப்பதும் இயல்பே யியல்பே, இரந்தோர்க் கீவ தும் உடையோர் கடனே". அன்பு படர்ந்த இல்லறத்தான் கறவாது வழங்கி, "ஈர்த்துவக்கும் இன்பத்தில்" மூழ்கித் திளைப்பான். ஆனால், கொடையென்னும் பெருமதகு திறந்து அடைக்கும் நேரமேயின்றி ஓடினால், வீடு என்னும் பெரிய ஏரி வற்றி மதகும் கால்வாயும் உலர்ந்துவிட நேரும்.

ஆதலால் அன்பின்வழிபட்ட ஆண்டகை வேளாளனாக மட்டுமிருந்து பயனில்லை. அதற்கேற்ற தாளாளனாகவும் இருக்கவேண்டும். தாளாண்மை என்பது பொருள் தேட

முயற்சித்தல். வேளாண்மை என்பது அருள்தேட முயற்சித்தல். "தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை வாளாண்மை போலக்கெடும்." அன்புடையார் சோம்பேறிகளல்ல என்பதை இதனாலறிந்தோம். அறியவே சோம்பேறிகள் அன்பர்களாக மாட்டார்களென்பதுந் தெரிந்தது.

ஆணிலோ பெண்ணிலோ, இல்லறத்தவரிலோ துறவறத் தவரிலோ சோம்பித் திரிபவர்களுக்கு அறநூல்களில் இடம் கிடையாது. யாவரும் தத்தமக்கியன்ற பணிகளைத் தமக்காக வும், பிறர்க்காகவும் செய்தல் வேண்டும். ஒரு செயலுமின்றி, பிறர் கையை எதிர்பார்ப்பது, பொறுமை மிக்க பூமிதேவியா லும் வெறுக்கத்தக்க செயலாகும்.

ஈதல் என்பது அறிவால் நாட்டுக்குத் தொண்டு செய் வோருக்கும், கல்வி பயிலும் ஏழைமாணவர்களுக்கும் ஈவதே யாகும்; சோம்பேறிகளை ஓம்புவதில்லை.

இனி காதலாகி, அன்பாக வளர்ந்துவந்த இந்தப் பைங் கொடி, தாளாண்மையால் தகுபொருள் தேடி, வேளாண்மை வேந்தாகி, விருந்தெதிர் கொள்ளும் பெருந்தண்வாழ்க்கை யோர் பால் ஒப்புரவறிதலுக்கும், ஈகைக்கும் பெருந்துணை செய்து விளங்குகிறது. அன்பில்லாதவன் உலகியல் அறி யான். உலகியலறிந்து உதவாதவனை, அறிஞர்கள் உயி ருடையோனாகக் கருதுவதில்லை. இருந்தும் இறந்தவனாகவே கருதுவர். "ஒத்தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்." பின்னும் அன்பு இவ்வுலகத் துப் பெறலாகும் பேறாகிய "ஈதல் இசைபட வாழ்தல்" இரண்டையும் தருவதோடு நின்று விடுவதல்ல. மனைவி மக்கள், உறவு நட்பு என்ற பரப்பெலாம் படர்ந்து, உற வினர்க்கு உறவினர், நட்பினருக்கு நட்பினர் என்ற இட மெல்லாம் எட்டிப்பிடிக்கின்றது. மனத்தை விரிவுபடுத்து கின்றது. ஏழைமக்கள் பிரபுக்களைக் கண்டு கையேந்துங் கால், 'ஐயா! கொஞ்சம் பெரியமனசு பண்ணுங்கள்' என்று வேண்டுவதுண்டு. அன்பின் வழிப்பட்டவர்களுக்குத்தான் அரவிந்தம்போல் அலர்ந்த பெரிய மனம் உண்டாகும். அஃ

தில்லா வன்பர்களை எத்தனைதாம் வேண்டினாலும் சுண்டக் காய் போல சுருங்கிய மனம்தான் வரும்.

இப்படி, பல்லார்பாலும் பரவிய அன்புடையான், நல்லணி பூண்டு இல்லத்திருந்தாலும், துறவறம் என்ற பட்டியவில் அடிவைத்தவனாகின்றான். இவன் ஒரு குலத்தனல்லன், ஒரு குடியனல்லன், ஓர் ஊரனல்லன், ஒரு நாட்டவனல்லன், எந்நாட்டிற்கும் உரியவன், யாவர்க்கும் உரியவன், உறவினனும் கூட. "மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவருமங்கில்லை, சுரந்தமுதம் கற்றா தல் போல் கறவாதளிப்பரேல் உற்றாருலகத்தவர்". இங்கு அன்பு இன்னார் இனியார் என்றன்றி யாவரையும் முற்றுகையிட்டுக் கொள்ளுகிறது. இந்தப்படி வளர்ந்த அன்பிற்குப் பறவையென்றோ, விலங்கென்றோ வேற்றுமையில்லை. இதனைத் தொல்லோர் அன்பென்பதில்லை, அருளென்றழைப்பர். இந்த அருளைப் பெற்றவரே பெயானைப்பெற்ற பெருங்கிழவராகின்றார். முதலில் காதல் தோன்றி, காதலில் அன்புதோன்றி அன்பில் அருள்தோன்றி மூன்றுதலைமுறைகளை ஒருங்கிருந்து கண்ட இவரன்றோ பாட்டனாராகின்றார்! வாளா வயதுறவளர்ந்து தளர்ந்து அருளென்னும்பேற்றைப் பெறாது வீழ்ந்தவருமுண்டு.

நன்னலமிகுத்த நம்பியாய்த், திகழும்போதே, இதனைப் பெற்று வாழ்பவருமுண்டு. "பெரியோரெல்லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாம் சிறியருமல்லர்" என இப்பெறலரும் பேறுடையோரை வியந்துரைத்தார் பாண்டியனார். இதுகாறும் கண்ட இந்த அன்பு நெறிதான், நம் நாவலந் தீவிற்கெல்லாம், நன்மைதரவந்த, நல்லோரனைவரும் கருதிய வழி; கண்டவழி; உற்றவழி; ஒழுகிய வழி. புத்தர் முதலாகிய சாந்த சீலர்களெல்லாம் இந்த அன்புநெறியாலேயே, உலகத்தை ஒன்றுபடுத்தினார்கள். அவர்களிடத்து கடற்படையுமில்லை, தரைப்படையுமில்லை, நீர்மூழ்கியுமில்லை, நெருப்புக் கக்கியுமில்லை, பறக்கும் படையுமில்லை, பதுங்கும் படையுமில்லை! அன்புநெறி நடத்த நல்லோர்களின் நாவசைந்தபோதே நாடசைந்தது.

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின், வகை தெரிவான்கட்டே உலகு" என்றார் அற்றைப் பெரு மகனார். "அணுகுண்டின் மேலோர் அழிகுண்டைச் செய் வான் பணிகுண்டு நிற்குமுலகு" என்பார் இற்றைச் சிறு மகனார். அன்பற்ற அறிவின் வளர்ச்சியால் நாடு நாசமடை கின்றது. கொலைமேல் கொலை செய்வானை இன்று குவலயம் பெரியவனென மதிக்கின்றது! இது நிலைக்குமா? மேன் மேலும் இப்படிச் சென்றால் இதற்கு முதலிடம் யாது? கொழுத்த கடாக்கள் முட்டிமுறிவது போல் வல்லவர்கள் முட்டிமுறிந்து மாளட்டும். தத்தித் தவழ்ந்து தளர்நடை யிட்டுச் சுயராஜ்யம் என்னும் சுவற்றைப் பற்றி நிற்கும் இளம் குழந்தைகளுக்குள் ஒரு போராட்டமா? ஒரு பாஞ் சாலியின் துயிலைத் தொட்டுப் பதினெட்டு அக்ரோணிகள் மாண்ட நாட்டில் இன்று பரிபவப்பட்ட பாஞ்சாலிகள் எத் தனை பேர்?

ஏனிந்த மதிம்யக்கம்? தாயும் சேயும், பூவும் மணமும் போல, பொருந்தி வாழ்ந்த மக்களுக்கு, இன்று ஏன் இந்தப் பகைமை வந்தது? எல்லாம் அன்பு நெறியைக் கைவிட்ட பாபமல்லவா? வளமற்ற தேசத்தாரல்லவோ யார் ஏமாறுவர் எனப் பார்த்துப் பிறர் பொருளுக்குப் பேயாய்ப் பறக்க வேண்டும். முக்கனி கமழும் முகில்தவழ் சோலையும், நத்தும் முத்தும் நலந்தரு கடலும், பாவிரி வளந்தரு, காவிரி நதியும், கங்கையும் விளைவும், எங்கணும் மிகுத்த, செல்வத் திருநாட்டவர்க்கா இந்தச் சங்கடங்கள்? எதற்காக? சிந் திக்கவேண்டாமா?

அரும்பெரும் மக்கள், ஆண்டாண்டாக வருந்திப்பெற்ற அதிகாரத்தை நிலைபெறுத்துவதற்குள், எத்தனை கருத்து வேற்றுமைகள்? இத்துன்பங்களெலாம் தொலைவதற்கு வழி யென்னை? நம்மை நாம் அடக்கிக்கொள்வதுதான். அன்று அயலார் ராஜ்யம்; இன்று சுயராஜ்யம். இன்று ஒவ்வொருவ ரும்அரசர், குடிகள் யார்? ஒவ்வொருவரும் குடிகள்தான். இப்போது நாமே குடி. நாமே அரசு. ஆகையால், நமக்கு ஆளும்பங்கு உள்ளதுபோல், அடங்கும் பங்கும் உள்ளது.

ஆகவே, நம்மை நாம் முதலில் அடக்கிக் கொள்ள வேண்டும். இதுதான் அன்பு நெறி, இக்கருத்து என்றைக்குக் கைகூடும் என்று கேட்கலாம். என்றைக்குக் கைகூடுகிறதோ, அன்றைக்குத்தான், நம் சுயாராஜ்யம் நிலைக்கும். இல்லையேல் தொல்லைதான். இலண்டனில் ஒருமுறை அரசாங்கத்தார் பண்டகசாலைக்குச் சீனி வேண்டியிருந்தது. அவரவர்களும் ஒரு வாரத்துக்குரிய தேவையை வைத்துக் கொண்டு மீதத்தை, அவ்வவரும் வாங்கிய "ரேஷன்" கடைமூலம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென, உத்திரவிட்டார்களாம். நகர் முழுவதும் ஒரேநாளில் உள்ளதவ்வளவும் திரும்பத் தந்துவிட்டார்களாம்! அன்று ஜனங்கள் "க்யூசிஸ்டத்தில்" கடைக்குச் சென்ற காட்சி, தேர்வடம் பிடித்ததுபோலிருந்ததாம். இதை நேரில் கண்ட எனது அன்பரொருவர் கூறக் கேட்டேன்.

கட்டளைக்குக் கீழ்ப்படியுந் திறத்தை மேல்நாட்டாரிடத்தில் காண்கின்றோம். யாரிடத்திருந்தும் நல்ல குணங்களைக் கற்கவேண்டும். எல்லாம் பிரசாரத்தால்தான் கைகூடவேண்டும். கற்றவர்கள் அத்தனைபேரும் மற்றவர்களுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லவேண்டும். அயலார்-நம்மவர் என்ற வேற்றுமையை, கொஞ்சம் கொஞ்சமாகப் போக்கவேண்டும். ஏழை மக்களைக் கூடியவரையிலும் காக்கவேண்டும். பேராசையால் நஷ்டமே வருமாதலால், அதை அடியோடு போக்கவேண்டும். மானக்கேடான, வஞ்சகச் செயல்களை நீக்கவேண்டும். நம் முன்னோர்கள் வாழ்ந்த மாண்பையும், மாபையும் நீடிக்க வேண்டும்.

"முற்காலப் பெண்டிர் கல்வி"

(S. சிவராம சீதாபாய்)

அகத்துவாழ் பெண்கள் அறிவு நிரம்பியவர்களாக இருந்தாலன்றி, புறத்துச் செல்லும் ஆடவர்கள் புலமையும், ஆண்மையும், பொருளீட்டலும், அருள்கூட்டலும், நாடும் மொழியும் பீடுற ஓங்கப்பாடுபடலும், பிறவும் வாய்ந்து

திகழாதென்பது ஒருதலே. பட்டறை வாய்த்தாலன்றிப் பணிவாயாது. துணேவாய்த்தாலன்றிச் சிறப்பு அணேயாது. ஆண்மையும் பெண்மையும் அழகுற நடத்தும் இல்லறம் வீணேயும் நாதமும் போலிருக்கும் என்ருர் பாரதியார். ஒத்த கல்வி, ஒத்த அறிவு இருந்தாலன்றி இல்லறம் செம்மை யுருது. எப்படி வில்லானது அம்பு இல்லாமல் பிரயோஜன மற்றதோ அதேபோல் மனிதன் தனக்கென ஒரு ஸ்திரி இல்லாதுபோனுல் பிரயோஜனமற்றவன் ஆகிருன். வில்லுக் குரிய பெருமை அம்பினுல் உண்டாகிறது. அதேபோல ஒரு மனிதனுக்குரிய பெருமை தன் மனேவியினுல் உண்டாகிறது என்பதை,

‘ As unto the bow is Arrow
So unto the man is woman...’ —*Lord Tennyson*

கூறியுள்ளார். ஆண்சிங்கம் போன்ற பெருமித நடை பகைவர்முன் நடக்க, சிறந்த மனேவியினுல் ஒருவனுக்குக் கிடைக்கிறதென்று வள்ளுவர் கூறுகிருர். அதனுல் பெண் கள் கற்று அகக்கண்களுடையவராய்த் திகழ்தல்வேண்டும். முற்காலப் பெண்டிர் கல்வியையும், அவர்கள் அறிவுத் திறனேயும் நாம் அறியவேண்டுமாயின் புராணங்கள், பஞ்ச காவியங்கள், சங்க நூல்களில் காணலாம். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழாகிய முத்தமிழைக் கற்றும், இயற்றியுமுள்ள நூல்களில் அவர்களின் அறிவுத்திறன் போற்றப்படுகிறது. முற்காலப் பெண்டிர் கல்வியில், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலிய சமயப் பற்றுடைய பெண்களின் சிறப்பும், வேதகாலத்திலும் உப நிடதங்கள் எழுதப்பட்ட காலத்திலும், மைத்ரேயி, கார்க்கி, மதலஸா, சூடாலே முதலிய மாதுசிரோன்மணிகள், கற் றுணர்ந்த ஞானிகளாகவும்,துறவிகளாகவும் விளங்கினுர்கள். ஆயிரம் பேர் கூடியிருந்த சபையில் கார்க்கி என்ற பெண் மணி யாக்ஞவல்கியர் என்றவரோடு ஞானசம்பாஷணே செய்தார் என்று அறிகிரும். முற்காலப் பெண்டிற் கல்வி யில், சமயக்கல்வி பெற்றவர்களாயிருந்தார்கள். எல்லாக் கல்வி முறைகளிலும் சமயக் கல்வியே மிக முக்கியமான

அம்சமாக இருந்தால்தான், ஆன்மநெறியில் சிறந்துவிளங்க முடியும். அல்லாது எத்தனை மொழிகளைக் கற்றுப் பட்டம் பெற்றாலும் அவை அலிபெற்ற அழகுபோலாம். ஆன்மீக வாழ்க்கைக்கு அவசியமான ஞானத்தைப் புகட்டக்கூடிய நூல்கள் ஒன்றிரண்டல்ல; நூற்றுக்கணக்காயுள்ளன. அவ ரவர்கள் மதத்தின் கல்வியையாவது கற்றிருக்கும் நிலையில் பெண்டிர் கல்வி பெருகவேண்டும். பெண்களை அபலைகள் (பலவீனர்கள்) என்று வழங்கப்படுகிறது. உண்மையில் பெண்கள் "பலைகள்" பூர்ண சக்திவாய்ந்தவர்கள் என்று சிவானந்த சுவாமி எழுதியுள்ளார்.

இனி எந்தெந்த மதத்தில் பெண்கள் கல்வித்திறம் போற்றப்படுகிறது என்பதைப் பார்ப்போம். இன்றைக்கு நடைபெறும் விழாவில் தேவாரம் பாடப்படுகிறது. அதற்கு இசை எடுத்துக் கொடுத்தவர் ஒருபெண்மணிதான். இசைத் தமிழ்த் தேர்ச்சியில் இன்றும் பெண்கள் அறிவு சிறந்து விளங்குகிறது. இசைத்தமிழும் இயற்றமிழும் பாடி இறை வனை வழிபட்ட புனிதவதியாரின் புகழ் நாம் அறிவோம். இனி இங்கு உதாரணமாக சில பெண்டிர் முற்காலப் பெண் டிர் கல்வியைப்பற்றி அறிவோம்.

சைவ சமயத்தில் பெண்டிர் கல்வி

சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஏற்றுக்கொள்ள மனமின்றி யிருக்கும் பரவையாரிடம் இறைவரே தூது செல்கின்றார். கதை தெரிந்ததுதானே. அங்கு இரவிலே அருமறை முனிவ ராய்ச் சென்று பரவையாரிடம் முதலிலேயே பீடிகைபோட் டுப் பேசுகிறார். என்ன சொல்கின்றார்:

" நங்கைநீ மறுது செய்யின் நான்வந்த துரைப்ப தென்ன "

பரவையாரோ உடனே சம்மதியாது நீர் வந்த காரியம் இன்னதென்று சொன்னால் "இசையுமானால் பார்ப்போம்" என்று கூறுகிறாரே தவிர, பெண்புத்தி பின்புத்திதானே என்று கூறும் மொழிக்கு முற்றுப்புள்ளி வைத்ததுபோல,

" அங்கயல் விழியி னாரும் அதனைநீர் அருளிச் செய்தால் "

என்று கூறிப் பின் இங்கெனக் கிசையுமாகில் இசையலாம் என்ற பதிலில் ஆழ்ந்த அறிவுத்திறனும் உறுதியும் காண லாம்.

"என்னிணைத் தணைந்தென்பால் இன்னதென் றருளிச்செய்தால்
பின்னைய தியலுமாகில் ஆம்'' எனப் பிரானர் தாமும்
மின்னிடை மடவாய்! நம்பி வரஇங்கு வேண்டும் என்ன
நன்னுத லாரும் "சால நன்று"நம் பெருமை என்பார்.

பின்னர்தான் சொல்கிறார்: "இந்த இரவிலே தாங் கள் வந்து சொன்ன காரியம் ரொம்ப அழகுதான். பங்குனித் திருநாளுக்குப் பொன் முதலியன கொண்டுவரப் போயிருக்கிறார் என நினைத்திருந்தேன். அவர் ஒற்றியூர் போய்ச் சங்கிலியை மணந்து உறுதிசெய்து கொடுத்துள் ளார். இங்கென்ன சார்வுண்டு'' எனக் கூறும்பொழுது மறையவர் நம்பி செய்த குற்றத்தை மனதில் கொள்ளாது ஏற்றுக்கொள்ளும்படி கூறும்பொழுதுதான், பாவையாரின் பண்பட்ட உள்ளத்தின் வேதனையை அவர் கூறும் வாக்கிலே காணலாம். அதுமட்டுமல்ல. பெருமைக்குத்தகுந்த பெரியோ ராகிய தங்களுக்கு இந்த வேலை வேண்டாம் என்று கூறு முகத்தால் வீரமும் அறிவும் காணலாம்.

அருமறை முனிவ ரான ஐயரைத் தைய லார்தாம்
கருமம்ஈ தாக நீர்இக் கடைத்தலை வருகை மற்றும்
பெருமைக்குத் தகுவ தன்றால் ஒற்றியூர் உறுதி பெற்றார்
வருவதற் கிசையேன் நீரும் போம்என மறுத்துச் சொன்னார்.

'அவரும் வரவேண்டாம் நீரும் போகலாம்' எனக் கூறுகிறார்.

இந்தத் தெய்வீகத் தம்பதிகளை ஒன்றுசேர்க்க இறைவனையே வேலை செய்யும்படிச் செய்த நம்பியாரூரைக் காணவும் மனமின்றி, நோயின் கொடுமை தீர்க்க வருகின் றார் என அறிந்து உடைவாளால் வயிற்றைக்கீறி நோய் நீங்கி விடுதலைபெற்ற கலிக்காம நாயனார் மனைவியாரைக் கொஞ்சம் அறியலாம். தம் கணவரோடு உயிர்விட எத்த னித்த சமயம், நம்பியாரூரர் வந்துவிட்டார் என்பதைக் கேட்ட அம்மையார் அங்கு அழுதுகொண்டிருந்தவர்களைத் தடுத்து, தம் கணவர் செய்கையை மறைத்து, வரும் நம்பியா

ரூரை பூரணகும்பம், தீபம் ஏற்றித் தொழுது எதிர் கொள்ளச் சென்றார்.

நம்பியாரூரர் வந்து "ஏயர்கோன் உற்ற நோயினை நீக்கி உடனிருக்க வந்தேன்" என்று கூறும்பொழுது சாதாரணப் பெண்ணாக இருந்தால் எதிர்கொண்டழைக்க முடியுமா? உம்முடைய வருகையை அறிந்து தான் என் கணவர் உயிரிழந்தார். நீர் வாரதிருந்தால் இருப்பாரே என்று கூறாது, ஏவலாளரிடம் உள்ளே பள்ளிகொண் டிருக்கிறார். அவருக்கு ஒரு குற்றமுமில்லை என்று சொல்லி யனுப்பும் நிலையில், தம் துக்கத்தை மறைத்து அடியாரை வரவேற்கும் பக்தி நிலையில் தீரமுடைய திறம் காணலாம். "மாதர்தம் ஏவலாலே, ஏதமொன்றில்லை உள்ளே பள்ளி கொள்கின்றார்" என்று கூறுகிறார்.

"பேயார் பெருமை"

இனி, கணவன் ஏற்காத நிலையில் தெய்வத்தன்மை பெற்ற காரைக்காலம்மையார் அளித்த மாத்தில் பழுத்த கனியை உண்டு, மனதில் பழுத்த கனியை உண்ணமுடியாது பிரிந்து வாழ்க்கை நடத்தும் நாயகனைக் காணச் சென்றார். கணவன் ஏற்றுக்கொள்ளாத நிலையில் உடல் நாயகனுக் காகத் தாங்கிய வனப்பை வெறுத்துப் பேய் வடிவம் பெற்று உயிர்நாயகனைப் பாடுகிறார்... "அயரா அன் பின் அரன்கழல் செலுமே" என்ற சிவஞானம் கைவரப் பெற்று அற்புதத் திருவந்தாதி பாடுகிறார். அன்பின் திறத் தில் ஆண்டவன் அருளைப்பாடிய அவர் கல்வித்திறம் எவ் வாறு போற்றப்படுகிறது. அது மட்டுமல்ல. அம்மையார் தமிழில் என் தெய்வம் பெரிது உன் தெய்வம் பெரிது எனப்பேசவில்லை. தத்தமக்கேற்ற முறையில் எக்கோலத் தில் எவ்வுருவத்தால் எத்தவங்கள் செய்வார்க்கும் அவ்வவர் தன்மையாகநிற்கும் இறைவன் அருளை அழகு ஒழுகப் பாடு கிறார். நூலறிவு பேசி அன்பின் திறத்தில் நுழையும் திறமில் லாதவர் திரியட்டும் என்பதை,

"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீலமணி மிடற்றான் நீர்மையே—மேலுலந்த

எக்கோலத் தெவ்வுருவோ எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே யாம்"

என்று பாடுவதில் பிணக்குண்டா?

"அரசியல் அறிவில் பெண்டிர் கல்வி"

அரசாட்சியையும், ஆளுந் திறமையும், நீதி வழங்கும் முறையும் முற்காலப்பெண்டிர் அரசியல் அறிவிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதை, சிலப்பதிகாரம், சிந்தாமணி மேருமந்தர புராணம், பாரதம் முதலிய நூல்களில் காண லாம். உதாரணமாக ஒன்றிரண்டு கூறுகிறேன். சிந்தாமணி யில் விஜயமாதேவி தன் அறிவு சான்ற மகன் சீவகனுக்கு அரசியல் முறை போதிக்கின்ருர். நீதியாக அரசர்கள் ஆறி லொன்ருக அறுதியிட்டு அப்பொருளை யீட்டுதல் நீதியான வரியாகும். தொன்று தொட்டுவந்த பகையைத் தம் நெஞ்சில் நிறுத்தி, "பகல் வெல்லும் கூகையைக் காக்க இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்பது போல அரசர்க்குரிய சூழ்ச்சி கூறுகிருர்.

பூவினும் பொருதல் வேண்டா சூழ்ச்சியே பொருந்த நோக்கி (சூளாமணி) என்பதுபோல காலமறிந்து பகைவரை வெல்லுதல், முள்ளைக்கொண்டு முள்ளைக் களைவதுபோல தமக்கு ஒன்ருய் உறவாயிருப்பவ ரிருவரைத் தம்மிற் பேதுசெய்து ஒருவரைக்கொண்டு ஒருவரை மோதியிடுதல். இதெல்லாம் அரசர்கள் செய்யும் காரியம். நீ அறிந்துகொள் எனப் போதிக்கிருர்.

நீதி யாலறுத் தந்நிதி யீட்டுதல்
ஆதி யாய அரும்பகை நாட்டுதல்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே

என்று கூறுவதில் காணலாம்.

அரசர்கள் பல நாட்டு வேந்தர் மகளைக் கல்யாணம் செய்வதையும் கூறுகிருர். வலிய அரசர்களையும், குறுநில மன்னர் மகளையும் மணம் செய்து கொள்வதும் முறை. நாட்டைப் பலப்படுத்த படைபலம் பெருக இம்மாதிரி

மணம் செய்யலாம் என்று கூறும்பொழுது அரசியல் அறிவைக் காண்கிறோம்.

" நலிவில் குன்றொடு நாடுறை நன்பொருட்
புலிய ஞர்மகட் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொண் மன்னர் வழக்கென நேர்பவே.

பழிக்கஞ்சிய பத்தினி

சிலப்பதிகாரத்தில் கண்ணகி கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்தாள். பின் மதுரைமன்னன் அநீதியாகத் தன் கணவனைக் கள்வனென்று கொலைசெய்ய, அந்த அநீதியைக் கேட்க மன்னன்சபைக்குச் செல்கிறாள். அரசன் நீதி தவறிய குற்றத்தை உணரச் செய்து, தம் நாட்டு வேந்தன் சோழன் பெருமை கூறி இமையவர் வியக்க, புறாவிற்காகவும், விலங்கின்பொருட்டும் நீதி வழங்கிய மன்னன்பெருமையைக் கூறி, மக்கள்பொருட்டு மன்னன் வழங்கும் நீதியைத் தவற விட்ட பாண்டியனை, இதுகாறும் யாருமே கூறாத சொல்லைக் கூறுகிறாள். "தேரா மன்னா" என அழைத்துத் தன் கணவனை அநியாயமாய்க் கொலைசெய்த குற்றத்தை உணர வைத்த கண்ணகியாரின் தீரமும் வீரமும் அரசியல் கல்வி அறிவும் காணலாம். கோணாத செங்கோல் கோடியது கண்டு "யானோ அரசன் யானே கள்வன்" என்று கூறி "அநீதியால் என் முறை பிழைத்தது, கெடுக என்னாயுள்" என்று உயிரைவிட்டு, புகழ் தேடச்செய்த கண்ணகியாரின் கற்புத்திறமும் காண்க. வீரம் என்பது பகைவரை எதிர்ப்பதுதான் வீரம் என்பதல்ல. உண்மையும், நன்மையுமானவற்றில் மாறு நேர்ந்தால் எதிர்ப்பதும் வீரமே. வீரச் செல்வி கண்ணகி; அன்புச்செல்வி மாதவி என்று சிலப்பதிகாரம் கூறும். மணிமேகலை அறச் செல்வியாக விளங்குகிறாள்.

கண்ணகியின் சிலை எழுப்பிய காரிகை

சேரன் செங்குட்டுவன், கோப்பெருந்தேவி இருவரும் கண்ணகியின் கதை கேட்டு கலங்கினர். பாண்டியன் ஆட்சியின் அநீதியும், கணவனுடனே கற்பரசி பாண்டியன் தேவியும் அரசன் உயிரைத் தேடிச் செல்வதுபோல,

"கணவனை இழந்தோர்க்கு காட்டுவதில்லென
இணையடி தொழுது வீழ்ந்தனள்"

என்று கேட்ட மன்னன் சேரன் இந்த இருவரின் சிறப்பைக் கூறி, இவர்கள் இருவரில் யார் சிறந்தவர் என்பதைத் தன் தேவியிடமே கேட்கின்றான்.

உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்த இச்சேயிழை தன்னினும்
நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?

என எப்படிக் கேள்வி?

இதற்கு கோப்பெருந்தேவி கூறும் விடைதான் என்ன? அழகும், ஆழ்ந்த அறிவுத்திறனும் உடையதென்பதை அவர் கூறும் வாக்கால் காணலாம். மன்னன் கேள்விக்கு மௌனமாக இருக்கவும் மனமில்லை. ஆறிய கற்பையும் சீறிய கற்பையும் ஒப்பிட்டு உயர்வுகாணல் அத்தனை எளிதாகத் தோன்றவில்லை. கூறுகிறார் தேவி:

காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து
அத்திறம் நிற்கநம் அகல்நாடு அடைந்தஇப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்.

என்ற சிறந்த வார்த்தையால் சிறப்புடன் கண்ணகிக்குச் சிலைஎழுப்பிய பெருமையில் சேரமன்னன் புகழும் சேர்ந்து விட்டது. அரசனுக்கு ஏற்ற அரசியாகக் காண்கிறோம். வீரச் செயல்புரிந்தவர்களுக்குக் கல்நாட்டும் வழக்கம் தமிழ் நாட்டில் உளது. இங்கு பெண்ணின் பெருமையும் வீரமும் கண்ணகி தேவியார் கதையின்மூலம் காணலாம். கற்சிலையிலும் காணலாம். காதலும் வீரமும் கலந்த கற்புடைக் கனலாகத் தோன்றிய நங்கையை, சோழநாட்டில் தோன்றி, பாண்டியநாட்டில் பதியை இழந்து, சேரநாடு சேர்ந்த சிலம்புச் செல்விக்கு கல்நாட்டி பெருமை கொடுத்தார் அண்ணன் சேரன். சொல்லால் தீட்டினார் தம்பி இளங்கோ அடிகள்.

பகைதீர்த்த பாவையின் அன்புத்திறம்

நைடதம் எழுதிய அதிவீரராமபாண்டியனைத் தமையனிடம் போருக்கெழுந்த தம்பியை, அண்ணியார் மதனலீலை

யார் கூறிய ஒரே வார்த்தையால் பகை நீங்கினன் ஒரே சொல்.

" செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே, விஞ்ச விரதமே பூண்டி
மேதினியை யாண்ட பாதனையும் ராமனையும் பார்" [ருந்து

என்றும், நைடதமியற்றி அண்ணன் மனைவியாரிடம் காட்ட வேட்டைக்குச் செல்லும் நாய்போலும், வேட்டைக்குச் சென்று திரும்பிய குதிரைபோலும் என்று உதாரணமாகக் கவியின் போக்கைக் கூறியபின் பக்திப் பாடல்களைப் பாடச் செய்த பெருமை பெண்ணுலகம் அறியும். குட்டித்திருவாசகம் என வழங்கும் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். இன்னும் பல உள.

தபோதனியார் அன்பு

தன் இன்பம் துறந்து தம்பிக்காக வாழ்ந்த அம்மையார் தவமும் சமயப் பற்றும், தம்பியார் உளராகவேண்டுமென உயிர்தாங்கி இம்மண்ணுலகில் வீட்டிலிருந்தே தவம்புரிந்த தியாகமும், தன்னலமற்ற வாழ்வும் உடையவராக வாழ்ந்த திலகவதியார் அன்புத் திறம் காண்க.

*தம்பியா ருளராக வேண்டுமென வைத்தயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்.*

என சேக்கிழார் வாய்மணக்கக் கூறுகிறார். தனக்கென வாழாது வாழ்ந்ததாலன்றோ, தம்பியாரைத் தன்னிடம் வரும்படிச் செய்தது தவத்தின் பலன் அது.

" நன்றறியா அமண்பாழி நண்ணுகிலேன் "

என்ற வீரச்சொல் கேட்ட தம்பியார் விரைவில் வந்து கண்டார்; குருவாகக் கொண்டார்; உற்ற நோய் நீங்கி உடையானைப் பாடி உய்ந்தார்.

மூவேந்தரும் மதிக்கும் மூதாட்டி ஔவையார்

ஔவையார், கவுந்தியடிகள், மணிமேகலை, திலகவதியார் முதலிய பெண்கள் துறவுக்கோலத்தில் வாழ்ந்து, மக்களுக்கு

அறம்கூறி நல்வழிப்படுத்திய பெருமை தமக்கென வாழாது உலகம் இன்புறத் தாம் இன்புற்றவர்கள். ஔவையார் நூல் அறஞ்செய விரும்பு என்று பாலர் வகுப்பில் ஆரம்பித்து பொருள், இன்பம், வீடு என முறையே உயர்த்தியும், அகநானூறு, புறநானூறு முதலிய சங்க நூல்களிலும் ஔவையார் கல்வியின் பெருமை காணலாம். அரசியல் அறிவும், குற்றம் நேருமிடத்து நீதிகூறியும், மன்னர்கள் தம்முட்பகை நேருங்கால் நயம்பட நீதி உரைத்துப் போரைத் தடுத்தும், புலவர்களால் போற்றப்பட்டும், மூவேந்தர்களும் மதிக்கும் பேறு பெற்றவர். விநாயகரகவல், நீதிநூல் முதலியவைகளும் இயற்றியுள்ளார். புறநானூற்றில் தமிழ்ப்பாட்டியின் தீந்தமிழ்ச் சுவை காணலாம்.

ஒரு பெரிய அதிசயத்தைக் கண்டார் ஒரு நாள் ஔவையார். சேரன் மாரிவெண்கோ, சோழன்பெருநற்கிள்ளி, பாண்டியன் தந்த உக்கிரப் பெருவழுதி இந்த மூவரும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்டார். ஒரு செய்யுளால் வாழ்த்துகிறார். நீங்கள் வாழ்க! உங்களைப் பார்த்தால் அந்தணர் வளர்க்கும் மூன்று அக்கினிகளைப்போல இருக்கிறீர்கள். வானத்துத் தோன்றும் மீனைவிட ஒளிவிட்டு உயர்ந்து சிறந்து விளங்குவீர்களாக என அன்பாய் வாழ்த்துகிறார். பாட்டித் தமிழைப் பார்ப்போம் :

“ ஒன்றுபுரிந் தடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக விருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தீர்
யானறி யளவையோ இதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம்மென
இயங்கு மாமழை யுறையினும்
உயர்ந்து மேந்தோன்றிப் பொலிக நுந்நாளே.”

இனி ஒரு இடத்திலே, அதிகமான் கொடுத்த நெல்லிக்கனியை உண்டார். நெடுங்காலம் தாம் வாழ விரும்பி, அரசன் கனி கொடுத்த தியாகத்தை என்னென்பேன் என கனியை உண்ட வாயால் மனங்கனிந்து, அரசனை வாழ்த்துகிறார். என்னை நெடுங்காலம் வாழ விரும்பிய நீ, நீலகண்டப்

பெருமானைப்போல நீடூழி வாழவேண்டும் என வாழ்த்து கிறார். (மரணத்திற்குக் காரணமான நஞ்சையுண்டும் நிலை பெற்றிருந்தாற்போல) நீ வாழ்வாயாக.

" பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல,மன்னுக பெருமநீயே
தொன்னிலைப் பெருமலை விடரகத் தருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாதாத னின்னகத்து
அடக்கிச் சாதனீங்க எமக்கீந் தனையே "

இன்னும் பல உள.

வைணவ பக்தை

அடுத்தாற்போல் பக்திப் பாமாலை பாடியும் பூமாலை சூடியும் பெண்மைக்குரிய காதலை தெய்வீகக் காதலாக்கித் திருப்பாவை பாடிய சிறப்பைப் பார்ப்போம். வைணவர்களுக்குத் திருப்பாவை வேதத்திற்கு ஒப்பானது. வேதம் அனைத்துக்கும் வித்து என்று பாடியுள்ளார் கோதை தமிழை.

" ஆண்டாள் அரங்கற்குப் பன்னு திருப்பாவைப்
பல்பதியம் இன்னிசையால் பாடிக் கொடுத்தாள்,
நற்பாமாலை பூமாலை சூடிக் கொடுத்தாளைச் சொல் "

என்று சிறப்பித்தபடி நாட்டுக் காதலும் பக்திக் காதலும் ததும்பப் பாடி உறக்கத்தில் நின்றும் எழுந்துவந்து எம்பெருமான் அருளுக்குப் பாத்திரமாகும்படியாக, "தோழிகளே வாருங்கள்" என அழைக்கிறார். மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளில் மாயன் புகழ்பாடி, நோன்பு நோற்க வாருங்கள். மிக்க விடியற்காலத்திலேயே உன்னை வந்து வணங்கி உன் அடிகளையே போற்றும் பிரயோஜனத்தைக் கேட்டருள்வாய் கோவிந்தா! என அழைத்து, எப்போதும் ஏழேழ் பிறவிக்கும் உன்னோடு உறவுள்ளவர்களாவோம். மற்ற விருப்பங்களைப் போக்கி எங்களை ஆட்கொள்வாயாக என்று சொல்லும் பாசுரத்தில் ஆண்டாள் சமயப்பற்றும், ஆண்டவனிடம் கூறும் உறுதியும் காணலாம்.

" சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்தநீ

குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். —திருப்பாவை

எனப் பக்திப்பாடல் பாடி பாவை நோற்ற திறம் பார்க்கலாம். அடுத்துப் பஞ்சகாவியப் பெண்களில், துறவு நிலையில் பள்ளி செல்ல எண்ணிய விஜயமாதேவியாரின் சிறப்பைப் பார்ப்போம். தாயைப் பிரிய மனமின்றித் தன் காலில் விழுந்த மகன் சீவகனை எடுத்துத் தேற்றுகிற பெண் இதயம் எத்துணை உறுதி பெற்றுள்ளது எனக் கவியில் காணலாம். தம் சமண மதத்தின் நூல்களைக் கற்று உண்டுவைத்தவர் என்பதை, சச்சந்தன் தேவியாரை மயிற் பொறியில் தாயிடம் போகும்படி கூற, தேவி மயங்கி அப் படியே விழுந்துவிடுகிறாள். பூரண கர்ப்பவதியான விஜய மாதேவியைத் தாங்கித் தேற்றுகிறான் அரசன். 'விஜயை, நீ அறிவில் சிறந்தவளல்லவா? நூல்களைக் கற்று அறிந்தும் கண்ணீர் விடுகிறாயே! இது உனக்குத் தகுமோ?' என விஜயையின் அறிவுத்திறனைப்பற்றிக் கூறுகிறான்.

வண்டுமொய்த் தாற்றும் பிண்டி வாமனால் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயும் உணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
ஒண்டொடி தகுவ தன்றா லொழிகநின் கவலை என்றான்.

அந்த விஜயமாதேவியே தன் மகனுக்குத் துறவுநிலை கூறும்பொழுது, நின் தந்தை சிற்றின்பப் பிரியனாக வாழ்ந்து நாடிழந்தான். நீயும் அவ்விதம் இராது காமத்தினை வென்று இளமையிலிருந்தே தவமும் தானமும் செய். இளமையாகிய கள்ளை உண்டு மகளிரிடம் மயக்குண்டு அறத்தை மறவாதே. நரைதிரை வருமுன்பே அருந்தவம் செய் எனக் கூறுகிறாள்.

“ முருந்தனைய தாமுறுவல் முற்றிழையார் சேரி
இருந்திளமைக் கள்ளுண் டிடைதெரித லின்றிக்
கருந்தலைகள் வெண்டலைக ளாய்க்கழியு முன்னே
அருந்தவமும் தானமும் ஆற்றுமினே கண்டீர்

எனத் துறவுநிலை போதிக்கிறாள்.

" அடிமை மாது அறிவுத்திறம் "

கொங்கு மண்டலத்தின்கண் அறிவு நிறைந்த பெண்கள் இருந்ததாக அறிகிறோம். கொங்கு வேளீர் என்ற அரசன் கொங்குமண்டலத்தின்கண்ணுள்ள விஜய மங்கலத்தில் கல்விகேள்விகளில் சிறந்திருந்தான். பெருங்கதை என்னும் காவியம் இயற்றியுள்ளான். ஒருசமயம் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களுக்குப், கொங்குநாட்டுப் புலவர்களுக்கும் பிணக்கு ஏற்படவே, கொங்குவேளீர் விஜய மங்கலத்திலேயே ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவினன். மதுரைச் சங்கத்தார் இதனைக் கண்டு பொறுதவர்களாகி ஒரு கவியை எழுதி அதற்குத் தக்க பதிலிறுக்குமாறு அரசனுக்கு அனுப்பினார்கள். அரசன் தனது வீட்டின் பணிபுரியும் வேலைக்காரியைக் கண்டு பதிலிறுக்குமாறு மதுரைக்கு அனுப்பினன். அவள் சென்று தக்க பதில் அளித்துப் புகழ் பெற்றாள். அதனைக் கொங்குமண்டல சதகத்தில்,

நீதப் புகழு தயேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெள்க வேகொங்கு வேள்அடிமை
மாதைக் கொடுஉத்த ரஞ்சொன்னது வும்கொங்கு மண்டலமே

என்ற பாடல் தெரிவிக்கிறது.

பெண்ணின் மேன்மைக் குணம்

கற்ற பெண்கள் தன் கணவன் பிறர் குறைகூறும்படி நடந்தாலும், தன்னை வெறுத்தாலும், தாம் பிறர் இகழும்படி காட்டிக் கொடார்கள். கண்ணகி இதயம் காதலன் கோவலனை எதிர்பார்த்திருந்தது. அவனும் வந்தான். தனிமையில் " போற்றா ஒழுக்கம் புரிந்தீர் " என்று கூறினாள். பின்னர் கள்வனாகப் பழிசுமத்தப்பட்ட நிலையில் அப்பழியைத் துடைக்க வீறுகொண்டெழுந்தாள். கதிரவன் ஆணையாக என் கணவன் கள்வனல்ல என மற்றப் பெண்மகளிரிடம் கூறினாள். பழிக்கஞ்சிய பத்தினியானாள். "இன்பம் எய்தும் பருவத்தில் அன்பனை இழந்தேன். கள்வனின் மனைவி" எனப் பழிச்சொல் வேறு என நினைத்து வெதும்பினாள். மன்னவன் தவறிழைக்க என் அன்பனை இழந்தேன். "ஆனால்

கைம்மைநோன்பு நோற்கும் பெண்களைப்போல கணவனைச் சிறிது நாள் நினைந்து அழுது, நதிகளில் நீராடிப் பின் மறக்கும் விதவைப் பெண்டிர்போலல்ல நான். வீரப்பெண். அரசன் அவையில் சென்று நீதி கேட்கப் போகிறேன்" எனக் கூறுகிறாள்.

இன்புறு தம்கணவர் இடர்எரி யகம்மூழ்க
துன்புறு வனநோற்று துயருறும் மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ

எனக் கூறிச் சிலம்பொன்று கையேந்திப் புறப்படுகிறாள். இதுகாறும் தன் வாழ்வை மற்றொருத்திக்கு அளித்து, உயிரைமட்டும் அவனிடமே நிறுத்தி நினைத்து வந்தவனை இப்பொழுது இழந்துவிட்டாள். ஊழ்வினை துறப்ப சூழ்கழல் மன்னா என்று கூறும்பொழுது வினைப்பயனைப்பற்றிப் பேசியுள்ள நிலையில் கண்ணகியின் கல்வியறிவு காணலாம். துன்பத்திலும் அவள் அறிவுத் திறன் அங்கு வேலை செய்கிறது. கணவன் இழைத்த துன்பமெண்ணாது, கற்பின் திறத்தால், கள்வனல்லன் என்ற பெயரை நிலைநாட்டினாள். காட்டிக் கொடுக்க மனம் வருமா ?

மற்றொரு மங்கையர்க்கரசி

ஞானசம்பந்தப் பெருமான் மதுரைக்கு வந்தார். மன்னர் சமண மதம் ; அரசியார் சைவ மதம். மதக்கொள்கை இருவர்க்கும் வேறு, மனம் வேறல்ல. அரசனிடம் அன்பு குறையவில்லை. நந்நாளை எதிர்பார்த்து ஏங்கியிருந்த அம்மையார், கவுணியர்பிரானைக் காணுகிறார். இங்கு, பெண்ணின் மென்மைக் குணத்தைப் பார்க்கலாம். கண்களில் நீர் பெருக, வாய்குழறப் பிள்ளையாரைப் பார்த்த உடனே, தானும் தன் பதியும் செய்த தவம் என்கிறார். பதியையும் சேர்த்தே பேசுகிறார்.

பானலங் கண்கள் நீர்மல்கப் பவள வாய்குழறி
யானும்என் பதியும் செய்த தவமென்கொல்

என்றார்.

மங்கையர்க்கரசியாக விளங்கும் அம்மையாரையும், கற்பிற் சிறந்த கண்ணகியாரையும் இன்று உருவம் அமைத்து வழிபடுகிறோம். கல்நாட்டும் வழக்கம் தமிழர் மரபல்லவா ?

ஒருநாடு உய்யவேண்டுமானால் அந்நாட்டின் மக்கள் கற்றல் கேட்டல் உடையவராய்த் திகழ்தல் வேண்டும். பெண்கள் கல்வி கற்பது தற்காலம் குறைவில்லை. கற்ற கல்வியின் அடிப்படையில் சமயக் கல்வியில் தலைசிறந்து நிற்றல் வேண்டும். அன்பு, அறிவு, ஆற்றல், ஞானம் எல்லாம் சமயக் கல்வி கற்றால்தான் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்; அல்லாத கல்வி வீண் கல்வியே. முற்காலப் பெண்டிர் கல்வியில் அருந் தமிழ்ச் செய்யுட்கள் ஆயிரக் கணக்கில் உள. அதுமட்டுமல்ல; அறிவுடைய நம்பியும் நங்கையும் சேர்ந்து நடத்தும் இல்லறம்தான் சிறப்புடையது. பிசிராந்தையார் கூறியபடி, " மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர் !" சிறந்த அறிவுடைய பெண் நடத்தும் இல்லறத்தில் ஆடவனுக்குக் கவலை யில்லையாம். அறிவு நிரம்பிய பிள்ளைகளால் பெற்றோருக்குக் கவலை இல்லை என்பதைக் கூறுகிறார். மதலசா என்ற ஒரு பெண்ஞானி தன் குழந்தைகளைத் தாலாட்டும்பொழுது ஞானிகளாகவே நினைத்து, " ஓ, குழந்தையே! நீ மாயையின் ஆதீனத்திற்கப்பாலுள்ள மாசற்ற சுத்த சர்வக்ஞன் " என்று பாடுவாளாம்.

சுத்தோஸி, புத்தோஸி: நிரஞ்ஜனோஸி
ஸம்ஸார மாயா பரிவர்ஜிதோஸி

என்று, தாய்ப்பாலை உண்ணும்போதே ஞானியின் எண்ணமும் சேர்த்து உண்டதனால், பின்னால் எல்லாக் குழந்தைகளும் ஞானிகளாகிவிட்டார்களாம்.

கற்ற பெண்கள் கடமை

தற்காலத்தில் பலவித மொழிகளைக் கற்றும், பட்டம் பெற்றும் வரும் தாய்மார்களே ! உங்கள் கல்வியறிவை வீண் தர்க்க வாதத்திலும், என்மதம் பெரிது உன் மதம் பெரிது என்று கூக்குரலிடாமலும், என் தெய்வம் பெரிது உன் தெய்வம் பெரிது என்று பேசி அவமே காலத்தைப் போக்

காது தம் தம் சமயப் பற்றில் உண்மையான உழைப்பும் உறுதியும்கொண்டு தெய்வீக வாழும்படி வேண்டு கிறேன். நன்னெறியை விட்டு விலகினுல் மக்கள் துன்புறு வர் என்ற பெரியார் வாக்குப்படி, நன்மனத்துடன் இயன்ற வரை பிறர்க்கு உதவி செய்தால், மன வாக்குக் காயங்களால் தொண்டாற்றிக் கடமை செய்தால் தனக்கும் பிறர்க்கும் பலன் உண்டு. சேவை செய்யுங்கள்; அன்பு கொள்ளுங்கள்; தியானம் செய்யுங்கள்; ஆத்மாநுபூதியடையுங்கள். இதுவே வேண்டுவது. ஜாதி, மதம் முதலியவற்றில் குறை கூருது கடமையாற்றும் பெண்கள், கற்ற பெண்கள் முன்வந்து பணி புரிவீர்களாக!

சர். பொன்னம்பலம் இராமநாதனர் ஜெயந்தித் திருவிழா

1951 ஏப்ரல் மாதம் 28-ம் தேதி மாலே திருவாளர் இராமநாதனர் நூற்ருண்டுத் திருவிழா வெகு நன்ருக யாழ்ப்பாணத்தில் பரமேசுவரன் கலாசாலேயில் அமைக்கப் பெற்ற அழகிய காவணத்தில் நடைபெற்றது. பிற்பகல் மூன்று மணிக்குச் சிற்றுண்டி வழங்கப்பெற்றது. பிறகு இராமநாதன் கல்லூரியிலிருந்து பரமேசுவரன் கல்லூரி வரையில் இராமநாதனர் திரு உருவப்படத்து ஊர்வலம் நடைபெற்றது. மாலே 6-30 மணிக்குத் திருவிழாக் காவ ணத்தில் மிகப்பெரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. சென்னே உயர்நீதிமன்றத்துப் பிரதம நீதிபதி தலேமை வகித் தார். அவரையும் மற்ற மக்களேயும் யாழ்ப்பாணத்து நகரத் தலேவர் திரு. சி. பொன்னம்பலம் அவர்கள் வரவேற் ருர்கள். பிறகு திரு. இராஜமன்னுர் அவர்கள் தம் தலேமை உரை நிகழ்த்தினுர்கள். இராமநாதனருடைய அரிய திருப்பணிகளே வெகு உருக்கமாக எடுத்துரைத்தார் கள். ஆன்மீகம் இலௌகிகம் என்ற இருதுறைகளிலும் பாட் டிற்கும் மக்களுக்கும் செய்த பெரிய திருப்பணிகளே எடுத் துக் கூறினர். பிறகு சென்னே முந்தியநாள் கல்வி அமைச்சர்

திரு. அவினுசிலிங்கம் செட்டியார் அவர்கள் இராமநாதனுர் செய்த அரிய தொண்டைக்குறித்துப் பேசினுர்கள். அவருக்குப் பிறகு இலங்கைக் கல்வி அமைச்சர் திரு. கனகரத்னம் அவர்கள் இராமநாதனுருடைய நாட்டுச்சேவையைக்குறித்து வெகு ஆர்வத்துடன் பேசினுர்கள். பின்னர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் வெகு அரியசொற்களால் நகைச்சுவையுடன் தம் உரையை நிகழ்த்தினுர்கள். இறுதியில் திரு. நடேசப் பிள்ளை அவர்கள் நன்றி கூறினுர்கள். இவ்விதமாக நூற்றுண்டு ஜெயந்தி நிறைவேறிற்று. இலங்கையிலும் மற்ற தமிழ்நாடுகளிலும் இராமநாதனுர் திருவிழா சென்ற இரண்டு வாரங்களாக நடைபெற்று வருகின்றது.

இராமநாதனுரைப்பற்றி சைவசித்தாந்த சமாஜத்தார்கள் மிகப் பெருமைப்படவேண்டும். 1906ல் சிதம்பரத்தில் நடைபெற்ற முதல் சமாஜக் கூட்டத்திற்கு அப்பெரியாரே தலைமை வகித்தார்கள். ஆகவே அன்னுரே சமாஜத்தின் முதற்றலைவர் என்றும், அன்னுரே அதனைத் தொடக்கியவர் என்றும் கூறவேண்டும். மீண்டும் ஒருமுறை சென்னையில் நடந்த கூட்டத்தில் தலைமை வகித்திருக்கிறுர்கள். அன்னுருடைய நினைவு எல்லா சமாஜ அன்பர்களுக்கும் மிகுந்த இன்பத்தையும் ஆர்வத்தையும் தரும் என்று அறியவேண்டும்.

கோ. கி.

தூய்மை உணவு

1. மக்கள் தொகை : கணக்குப் புள்ளிகள் என்றுல் சில தடவைகளில் நம்பமுடியாமல் இருக்கும். சிலவற்றைக் கேட்டால் இப்படியும் இருக்குமோ என்றுகூட எண்ணுவோம். ஆனுல் நடைமுறையில் பார்க்கும்போது அக்கணக்குகள் நம்மை யாதென்றும் செய்வதில்லை. இது இயற்கை. பயங்கரமாகத் தோன்றியது பயமில்லாதபடி ஆய்விடுகிறது. இதனை மக்கள் எண்ணிக்கையில் காணலாம். சென்ற மாதத்தில் நமது பரதகண்டம் முழுவதிலும் எத்தனை மக்கள் இருக்கிறுர்கள் என்று கணக்கு எடுத்தார்கள். அக்கணக்கின்படி 3, 6, 18 நூறுயிரம்(லட்சம்)மக்கள் உளர் என்று வெளி

யிட்டார்கள். இந்தத் தொகை சென்ற பத்து ஆண்டுகளின் முன் இருந்ததைக் காட்டிலும் நூற்றுக்குப் பதின்மூன்று மடங்கு மிகுதி ஆகி இருப்பதாகக் காண்கிறோம். இப்படியே மக்கள்தொகை பெருகிக்கொண்டே போனால் மக்களுடைய பிழைப்புக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யக் கூடுமோ என்று பொதுமக்களும் அரசாங்கத்தாரும் ஏக்கம் பிடித்துப் போவார்கள். இந்த மக்கள் 12 நூறாயிரம் சதுர மைல் கொண்ட இந்த தேசத்திலே குடி இருக்கிறார்கள். அதாவது ஒரு சதுரமைல் இடத்தில் 296 மக்கள் குடியிருக்கிறார்கள். அதாவது ஒரு சதுரமைல் இடமானது 296 பேர்கள் அடங்கிய குடும்பங்களுக்கு உணவு, உடை, உறையுள் வசதிகளைத் தரவேண்டியிருக்கிறது. இது சாத்தியமா என்ற கேள்வி புறப்படுகிறது. மற்ற நாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் நமது நிலைமை பரிதாபமானது என்றே கூற வேண்டும். சீனா 123, ருஷியா 23, அமெரிக்கா 50, பிரஜில் 15, பிரான்சு 193, பாகிஸ்தான் 210 வீதம் கொண்டிருக்கின்றன. நம்மைவிட அதிக நெருக்கடி கொண்டவை: ஜெர்மனி 506 ; ஆங்கிலம் 536 ; ஜப்பான் 579 என்பவை. பின்சொன்ன மூன்றில் மக்கள் எவ்வாறு உழைக்கிறார்கள் என்று அறிவோம். நாம் என்ன வறுமை நிலைமையில் இருக்கிறோம் என்று சிறுபிள்ளையும் அறியும் அல்லவா ?

2. தேவைகள் : மனிதனுக்கு இன்றியமையாத தேவைகள் மூன்று. அவைகள் :— உணவு, உடை, உறையுள் என்பன. எப்படிப்பட்ட மகனுக்கும் இம்மூன்றும் இல்லாவிடில் அவன் நாகரீகத்துடன் பிழைக்க முடியாது. காட்டுமிராண்டி உடையையும் உறையுளையும் தவிர்க்கலாம். ஆனால் அவனும் உணவைத் தவிர்க்க முடியாது. உணவு குன்றினால் வலி குறைந்து உடல் மெலிந்து இறுதியில் இறக்க வேண்டும். ஆகவே மகனுக்கு உணவு மிகவும் வேண்டத்தக்கது. அதற்கு அவன் பல விதங்களிலும் முயற்சி செய்து உணவுப் பொருள்களை விளைவித்து உண்டு பிழைக்கிறான். மற்ற நாடுகளில் உணவுக் கேள்வி மிகுதியாக இருக்கவில்லை. நமது நாடு உணவு வளர்ச்சி நாடாகக்

கருதப்பட்டது. மக்களும் யாதொரு தடையுமின்றி உணவுப் பொருள்களைப் பெற்று இனிதாக வசித்துவந்தார்கள்.

அண்மையிலே நடந்த பெரும் போரின் விளைவாக மக்களுடைய எண்ணங்கள் மாறிவிட்டன. நமது நாடு வேளாண்மை மிகுந்த நாடாக இருந்ததற்கு மாறாக வேளாண்மை குறைந்த நாடாக ஆயிற்று. நமது நாட்டு மக்களுக்கு எத்தனை உணவுப் பொருள்கள் வேண்டுமோ அவ்வளவும் இப்போது விளைவதில்லையாம். இதனை அரசியலார் கண்டுபிடித்துக் கணக்குப் புள்ளிகளைத் தெரிவிக்கிறார்கள். அதனைக் கேட்ட மக்கள் பிரமித்துப் போயினர். நாட்டில் விளைவு நிலம் ஒரேமாதிரி இருக்க, மக்கள் விருத்தியாய்க் கொண்டிருக்க எவ்வாறு விளை பொருள் போதுமானதாகும்? இப்போது உள்ள மக்கள் தொகை 36 கோடி பேர். இவர்களுக்குப் போஷணை தருகிற நிலங்களோ பெருகவில்லை. ஆகவே வறுமை உறுத்திக் கொண்டிருக்கும் அல்லவா? தற்போதுள்ள விளைநிலங்களை நம் நாட்டு மக்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுத்தால் ஆள் ஒன்றுக்கு 7 செண்டு நிலம்தான் கிடைக்குமாம். 7 செண்டில் எவ்வளவு தானியம் விளையும். விளைந்தாலும் அது ஒரு ஆளுக்குப் போதுமா? மேலும் மக்கள் நாட்டு நிலங்களைச் சமப் பகுதிகளாகப் பிரித்து உழுகிறார்களா? இல்லவே இல்லை. சிலமக்கள் பெரும் பாகங்களையும் பல மக்கள் சில்லறைப் பகுதிகளையும் உழுகிறார்கள். மற்றப் பெரும் பகுதியினர் எதுவும் இல்லாமல் இருக்கின்றனர். இநதத் தாரதம்மியம் நாட்டில் இருந்தால் எவ்வாறு சமஉரிமை ஏற்படும்? ஆகவே, உணவைப் பொருத்த மட்டில் நாடு நாளுக்கு நாள் சீர்கேடு அடைந்துகொண்டே வருகிறது. நாட்டு அரசியல் இதனை ஆராயவேண்டும். தயாதன் இதனை ஆராய்ந்து நாட்டை நன்றாக ஆண்டதாகக் கம்பர் கூறுகிறார்.

“ வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும்ஓர்
செய்யெனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான் ”

என்ற செய்யுளை ஆராயுங்கள். தயாதனுடைய நாடு மிகப் பெரிய நாடாக இருந்தும் அதனை ஆளுகையில் ஒரு வறிய

வன் தனக்கு உள்ள ஒரு செய்நிலத்தைக் கொண்டு எத்தனை சிக்கனமாகப் பாடுபடுவானே, அதுபோலவே தயா தன் பெரிய நாட்டையும் ஆண்டானும். இந்தச் சிக்கன முறை இந்த நாளில் இந்த ஆட்சியில் உண்டா ?

3. உணவுப் பெருக்கு : சென்ற பத்து ஆண்டுகளாக உணவுப் பொருள்கள் நமது நாட்டிற்குப் போதாததாகையால் அவைகளைப் பெருக்க வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இக்கிளர்ச்சியை அரசியலாரே தொடங்கினர்கள். அதற்காக நூறுயிரக்கணக்காகப் பணத்தைச் செலவழித்தார்கள் ; இன்னும் செலவு செய்துகொண்டே இருக்கிறார்கள். இதனல் எத்தனை பயன் ஏற்பட்டது என்பதுதான் கேள்வி. நாட்டில் நெருக்கடி பெருகிக்கொண்டு வருகிறதே ஒழிய சிறிதும் குறைந்தபாடில்லை. உணவுப் பஞ்சத்தினல் ஏழை மக்கள் மிகுதியும் வருந்துகிறார்கள். அரசியலார் செய்து வரும் செயலாவது இந்த முயற்சியினல் கட்டி வருகிறதா என்ற கேள்வி கேட்கப்படுகிறது. வேறு சிலர் இப்போது செலவு செய்து வரும் பணத்தையாவது மக்களுக்குக் கொடுத்தால் அதுவே பெரும் பகுதிப் பஞ்சத்தை நீக்கிவிடும் என்கிறார்கள். இதனை அரசியலார் எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள் ? ‘பணத்தை இறைத்துவிட்டால் எப்படி உணவு கிடைக்குமோ? உணவு அல்லவோ நமக்கு வேண்டும்? அது இல்லாவிட்டால் பணம் யாது செய்யும்? பணத்தையா உண்கிறீர்கள் ?’ என்று அரசியலார் கேட்பார்கள். இதற்கு எப்படி விடை கூறமுடியும் ? ஆகவே உணவு உற்பத்தி செய்வதே சிறந்தது.

கணக்குப் புள்ளிப்படி ஓர் ஆளுக்கு 7 செண்டுதான் உள்ளது என்பதை மறந்து விடவேண்டும். மக்களில் பாதிக்குமேல் குழந்தைகளும் முதியவர்களும் இருப்பார்கள். குடும்பங்களை எண்ணிக் கணக்கிட்டால் ஒவ்வொன்றிற்கும் பெரிய பகுதி நிலம் கிடைக்கலாம். அதனைச் சீர்திருத்தி நூதன முறையில் உழவு செய்தால் போதிய உணவுப் பொருள்கள் எடுக்கலாம். மேலும், கணக்கற்ற நிலங்கள் வனங்களாகவும் பாலைகளாவும் இருக்கின்றன.

அவைகளை உணவுப் பெருக்குக்கு வசப்படுத்தவேண்டும். பாலைகளைச் சோலைகள் ஆக்கவேண்டும். வனங்களைப் புலங்கள் ஆக்கவேண்டும். அப்போது உணவுப் பொருள் மிகுதியாகக் கிடைக்கும். புகையிலை போன்ற லாகிரிப் பொருள்களை நிலங்களில் விளைத்து மக்களையும் நிலத்தையும் கெடுத்துப் பொருள் பெறுவதைக் காட்டிலும் நெல்லும் சோளமும் விதைத்து மக்களையும் நிலத்தையும் நன்மையுறச் செய்வதே நலமாகும். இவ்வாறு வளமும் பயனும் பெருக்குவதே மக்கள் நாடக்கூடிய நெறியாகும். அதனை நமது அரசியல் கைப்பற்றி யொழுகுமாக !

4. பிறநாட்டு வழக்கம் : நமது நாட்டில்தான் நிலச் செழிப்பு இருந்தது. நீர்ச் செழிப்பும் நிரம்ப இருந்தது. மலைகளும் சோலைகளும் அவைகளிலிருந்து பாயும் ஆறுகளும் நிரம்ப உண்டு. ஆகவே நற்பயிர் விளைத்துப் பயனை உணவாக அருந்துவதில் வெகு எளிதில் நன்மை கண்டார்கள். அவ்வித முயற்சிக்கு ஏற்றதாகப் பருவக்காற்றும் மழையும் இருந்தன. மழை பொய்க்கின் வேளாண்மை கெடும். அவ்வாறு கேடு உண்டாகாதபடி வனங்களையும் காத்து வந்ததோடு ஆறுகளுக்கு அணைகோலி கால்வாய்கள் வெட்டிக் குளங்களைத் தோண்டி வேண்டிய நீர்ப்பாய்ச்சல் வசதிகளை அக்காலத்து அரசியலார்கள் ஏற்படுத்தினார்கள். இக்காலத்திலோ பொன் முட்டை வைத்த வாத்தை அறுத்தாற்போல் வனங்களை அழித்துப் பொன்னைத் தேடினார்கள். பொழில்கள் மறைய மழையும் மறைய ஆறுகளின் உற்பத்தி குறைய வளமை கெட்டுவிட்டது. இதனாலே விளைநிலம் குறைந்து மக்கட்கு வேண்டிய உணவு குறைந்துவிட்டது.

பிறநாடுகளிலோ நிலவளமும் நீர்வளமும் குறைவு. எடுத்துக்காட்டாக இங்கிலாந்தை எடுத்துக் கொள்ளுவோம். அங்குள்ள மக்களுக்கு எத்தனை உணவு வேண்டுமோ அத்தனை விளைநிலம் இல்லை. ஆகவே அவர்கள் தங்கள் நாட்டில் உண்டாகும் விளைவிற்கு மேல் அதிகப்படியான கூலங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யலானார்கள். இந்த இறக்குமதி தானியமும் போதாதாயிற்று. நாட்டுத்

தட்ப வெட்ப நிலைக்கு ஏற்றபடி மரக்கறி உணவை விட்டு நிணக்கறி உணவைப் போற்றினார்கள்; நிரம்ப புல்லாந் தரைகள் உள்ளதால் ஆடுமாடுகளைப் பெருக்கி அவைகளை அறுத்து உண்ணத் தொடங்கினார்கள். காட்டில் வேட்டை யாடி விலங்குகளைத் தின்றார்கள். வானத்தில் பறக்கும் பறவைகளைச் சுட்டு வயிற்றை நிரப்பினார்கள். நீரில் வலை வீசி நீந்துவனவற்றைச் சாப்பிட்டார்கள். இந்த வகையில் குறைவை நிறைவாக்கிக் கொண்டார்கள். சிற்றுயிர்களைக் கொல்வதைக் கொலை என்று அவர்கள் எண்ணவில்லை. அவர்களுடைய சமயமும் அவ்வுணவிற்கு ஆதாவு அளிக் கிறது. சிற்றுயிர்கள் மனிதர்கள்உணவிற்காகவே படைக்கப் பட்டன என்பது அவர்கள் சமயக் கருத்து. உயிர்களைக் கொலை புரிவது பாவமும் அல்ல என்பர். அவ்வுயிர்களுக்கு ஆன்மாவும் இல்லை என்பர். ஆகவே பயிர்களை விளைத்தல் போல் உயிர் வருக்கத்தை வளர்க்கத் தொடங்கினார்கள். இந்த வகையில் உணவுப் பிரச்னை அவர்களுக்கு ஒருவாறு ஆறுதல் கொடுத்தது.

இங்கிலாந்து முதலிய சில நாடுகளில் வரவாச் சிற் றுயிர் வளர்ச்சிக்கும் போதுமான நிலங்கள் இல்லாமல் கைத்தொழில்சாலைகள் பெருகின. ஆகவே உயிர்களை வளர்த்தும், பெரிய தேசங்களான ஆஸ்திரேலியா முதலிய வைகளிலிருந்து பெருவாரியாக மாமிசத் துண்டங்களை இறக்குமதி செய்யத் தொடங்கினார்கள். இந்த வகையில் உணவுப் பிரச்னை மேல்நாட்டு வெள்ளையரில் ஒருவாறு கை கூடிற்று. நமது நாட்டில் என்ன ஆயிற்று பார்ப்போம்!

5. நமது நாட்டு உணவு: நமது நாட்டில் மக்கள் உணவு அல்லது திண்டி யாது? பிறநாட்டைப்போல் ஊன் கறியும் கொண்டதா, அல்லது மரக்கறி மட்டுமா என் பதைச் சற்று ஆராய்வோம். வெளிநாட்டார், நமது நாட் டில் மரக்கறி மட்டும் உண்டு, ஊன்கறி இல்லை என்று நினைக்கிறார்கள். நம்மிலும் வைதிகர்கள் அல்லது சமயச் சார்புடையவர்கள் அப்படியே நினைக்கிறார்கள். ஆனல் உண்மை அப்படியா? நமது நாட்டில் சமய அன்பு மிகுதி

தான். நமது சமயங்களில் ஊன் உணவு கூடாதுதான். பெரிய சமயங்களாகிய சைவம் வைணவம் என்ற இரண்டிலும் ஊன் உணவு தள்ளப்பட்டது. சமயப் பெரிய நூல்களிலும், திருக்குறள் போன்ற இலக்கியங்களிலும் ஊன் அல்லது புலால் விலக்கப்பட்டது. ஆகவே, எல்லா மக்களும் மரக்கறியே உண்பவர்கள் என்று எண்ண இடமுண்டு. சமய ஈடுபாடு கொண்ட அந்தணர்கள், சுத்த சைவர், வீர சைவர், சுத்த வைணவர் முதலியோர்கள் ஊன் உணவைக் கருதுவதில்லை. ஆகவே நமது நாட்டுக் கொள்கை ஊன் அற்ற மரக்கறியேயாகும். மரக்கறியில் சத்துப் பொருள்கள் குறைவு. ஆதலால் நெய், பால், தயிர் முதலியவைகளை மிகுதியாக உட்கொண்டார்கள். அப்பொருள்கள் சேர்ந்த தின்பண்டங்களும் மிகுதியாக உட்கொண்டார்கள். உயிர்க் கொலை உயிர்த்துன்பம் முதலியன அறவே விலக்கப்பட்டன. அப்படியிருந்தும் இன்றைய நாள் என்ன காண்கிறோம்? எந்த ஊர் பார்த்தாலும் ஊன் கடைகளும் மீன் கடைகளுமே பெருகிக் கொண்டு வருகின்றன. ஊன் உண்ணும் மக்களும் மிகுதியாகிக்கொண்டே வருகிறார்கள். பல வகுப்பார்கள் புனிதநாட்கள் தவிர மற்ற நாட்களில் ஊன் உணவு கொள்ளுகிறார்கள். புகைவண்டி நிலையங்களிலும் பட்டைச் சாதங்களை விடப் பிரியானிச் சாதங்கள் மிகுதியாக விற்கப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன? காலவேறுபாடு தானா, சரித்திரக் காரணமும் உண்டோ? ஆராய்வோம்.

6. சரித்திரப் போக்கு: வடநாட்டிலே பண்டைக் காலத்திலிருந்தே பாமரர்கள் ஊன் உணவைக் கொண்டிருந்தார்கள். அரசர்கள் அந்தணர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்வித்துப் பல உயிர்களையும் கொன்று அவற்றின் பிணத்தை உண்டார்கள். பௌத்தர் தோன்றி அதனை மறுத்துப் பேசினார். மகா வீரர் தோன்றி உயிர்க் கொலை மட்டுமன்றி, புலாலுண்ணலையும் தடுத்தார். நாளாவட்டத்தில் வேள்விகள் இறைந்தன. ஆனால் சாக்தேய சமயம் வளர்ந்து உயிர்க்கொலை புலாலுண்ணல் மிகுதியாயிற்று. இப்போது வங்கநாட்டிற்குச் சென்றால் அந்தணரும் மாமிசம் உண்

பதும் மீன் உண்பதும் கொண்டிருக்கக் காண்போம். மிகப் புகழ் பெற்ற தட்சிணேசுவரர் கோயிலில் வாயில் தாண்டி னதும் கூற ஒண்ணுத மாமிச நாற்றம் மூக்கில் ஏறுகின்றது. இராமாநுஜர் கொண்டு சென்ற ஸ்ரீவைணவமே ஒருவாறு இந்தக் கோரமான உணவைத் தடுத்தது. ஆகவே இன் றைக்கும் வடநாட்டில் ஊன்கறி தடுக்கப்படாத ஓர் உண வாக அமைந்திருக்கிறது.

தென்னுட்டைப் பொறுத்த மட்டில் உணவுப் பிரச்னே அத்தனைத் தூய்மைக்கேடு கொண்டதாக இல்லை. சங்கத்தார் காலத்தில் அரசர் அவைகளில் நிணச்சோறு மிகுதியும் ஊட்டப்பட்டது. புலவர்களும் நிணத்தை உண்டு களித்தார் கள். சமயத்திலும் நிணம் தள்ளப்படவில்லை. வேலன் வெறி யாடலில் ஊன் எடுத்தாளப்பட்டது. ஆனால் அதனை வெறுத் துத் திருக்குறளும் மற்ற நீதிநூல்களும் ஆரவாரித்தன.

"அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்" என்று நீதி ஓதப்பட்டது. சமணர் ஆதிக்கம் ஓங்கவே, உயிர்க் கொலை தடுக்கப்பட்டது. சைவம் ஓங்கின நாளில் ஊன் உணவு மறக்கப்பட்டது. ஆலயங்களில் எல்லாம் சுத்த மாக் கறியே ஆளப்பட்டது.

ஆனால், குக்கிராமங்களிலோ ஊர்த்தேவதைக் கோயில் களிலோ மறியறுக்கப்பட்டு ஊன் கொள்ளப்பட்டது. ஆடு, கோழி, பன்றி, எருமை இவைகளும் பலி கொடுக்கப்பட் டனவாம். அந்தப் பழக்கத்தின் விளைவாக ஆயிரக் கணக் கான ஆடுகளும் கோழிகளும் நாட்டுராயன், பன்னுரி, சூலக் கல் முதலிய இடங்களில் கொலை செய்யப்படுகின்றன. மாரி யம்மன் விழாக்களிலுங் கூத்தாண்டி விழாவிலும் எத்தனை உயிர்கள் செகுக்கப்படுகின்றன! இவைகள் எல் லாம் மக்கள் வயிற்றுக்குள் தானே செல்லுகின்றன? இதனை வீரசைவர் எதிர்த்தனர். சாந்தலிங்க சுவாமிகள் கொலை மறுத்தல் என்ற நூலில் அறவே மறுத்தார். இந்த நிலை மையை அறிந்தால் இப்போதைய ஊனுணவின் போக்கினை ஒருவாறு அறிய முடியும். என்றாலும் மேற்கு நாடுகளைப் போல ஊன் உணவு அத்தனைப் பெருக்கமாக அடைய

வில்லை. மாக்கறி அதிகப்படுத்தாமற் போகுமாயின் நமது நாடும் கூடிய விரைவில் மேற்கு நாட்டைப்போல் ஆகிவிடும். அப்போது சமயக்கொள்கை ஒன்றுயும், மக்கள் பழக்கம் வேருயும் போய்விடும். அதனைத் தடுப்பது யாருடைய செயல் ! சமயப் பெரியார்கள் செயல் அல்லவா ?

7. எடுத்துக் காட்டுகள் : புத்தர் வேள்விகளில் உயிர்க்கொலை கூடாது என்று போதித்தார். புத்த சமயம் சீனு, ஜப்பான், இந்துசீனு, இலங்கைமுதலிய நாடுகளில் நிரம்பப் படர்ந்திருக்கிறது. ஆனல் அங்கே உயிர்க்கொலை இல்லையா? மிகவும் உண்டு. ஆடுமாடுகள்மட்டுமல்ல. புழு, பாம்பு, நத்தைமுதல்கொண்டு சீனர் உண்கிருர்களாம். அப்போது சமயக்கொள்கைவேறு, பழக்கம்வேறு ஆகிவிடுகிறது அல்லவா? அவ்வாறு நமது நாடும் ஆகக்கூடாது. அதற்கு, முன்னமே அணை கோலிக்கொள்ள வேண்டியது பெரியோர் கடமை.

தற்போதைய நகரம் ஒன்றை எடுத்துக் காட்டாக எடுத்துக் கொள்வோம். கோவை நகரில் மக்கள் தொகை 1,94,000. இதில்உணவுப்பங்கீட்டின் கணக்குப்படி 1,80,000 பேர் சீட்டுப் பெற்றிருக்கிருர்கள். இவர்களுக்கு எல்லாம் அரிசி, சோளம் முதலிய தானியங்கள் வினியோகம் செய்யப்படுகின்றன. இப்படியே தானியங்கள் மட்டும் வினியோகம் ஆனல் உணவுப் பஞ்சம் இல்லை. ஆனல் கொடுக்கும் தானிய அளவு போதாததாயிருக்கிறது. ஆகவே மற்ற வகைகளில் நிறைவு படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. சிலர் காய்கறிகள் முதலியவைகளைச் சேர்த்துக் கொள்ளுகிருர்கள். இவைகள் மிகுந்த விலைக்கு விற்கப்படுகின்றன. பணக்காரர்கள் ஊன் உணவு உட்கொள்ளுகிருர்கள். இதன் விலை மிகுந்ததுதான். ஆனுலும் வாங்குகிருர்கள். பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிடப் பத்துமடங்கு ஊன் கடைகள் அதிகமாகிவிட்டன. ஆகவே மக்கள் ஊன்உணவை மிகுதியாக வழங்கிக்கொள்ளத் தொடங்கினர்கள் என்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் போதுமான தானியம் கிடைக்காததனல்தான். ஆகவே எப்போதாவது சிற்றுண்டி போல அரிய பொருளாக உண்டுவந்த ஊன் உணவை இப்

போது கட்டாயத்தின்பேரில் மிருதியாக உண்ணவேண்டி வருகிறது. இதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா ?

8. செய்ய வேண்டிய முறைகள் : தூய்மை உணவாகிய சைவ உணவு சமய நூல்களின்படி அவசியமே. ஆனாலும் மக்களுக்குப் போதிய சைவ உணவு தராவிட்டால் அதற்கு வில்லங்கம் ஏற்படுவது இயல்பே. இதனை நன்கு ஆராய்ந்து சைவ உணவு நல்லது என்று வாய் மொழியால் போதித்தல் ஒன்றே போதாது. சைவ உணவிற்குச் சாதகமான எல்லா வசதிகளும் ஏற்படுத்துவதே அறிஞர்களுடைய கடமை. இதனை நமது சைவ சங்கங்கள் ஆராய்ந்து அதற்குச் செய்ய வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு சைவப் பணியில் நன்றாக உழைப்பார்களாக.

அன்பர்கள் சேவை, தொண்டர்கள் சேவை இவைகள் மிக்க நல்லவை என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். சுய நலச் சேவையைக் காட்டிலும் அன்பர் சேவையே மிக்கப் பயனுடைத்தாம்.

> “ அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே ”

என்றும்,

> “தனக்கென வாழாப் பிறர்க்குறி யாளர் ”

எனவும் நூல்கள் புகழுகின்றன. ஆகவே அப்படி அன்பர் பணி செய்வதிலே உணவுச் சீர்திருத்தம் செய்து எல்லாரையும் சைவ உணவு கொள்ளும்படி ஏவுதல் நல்லது அல்லவா ? தான்மட்டும் சைவ உணவு கொள்ளுவேன் என்று பெருமை பேசுவதில் பயனில்லை. அண்டை வீட்டானும் சைவன் என்று கூறக்கூடும் வண்ணம் அவனைச் சீர்திருத்தவேண்டும். அதற்காக அவனுக்குப் போதிய உணவுதரச் செய்யவேண்டும். நமது நகரம் நாடு இவைகளில் உள்ள எல்லாரும் சைவ உணவு பெறுதற்கு உரிய காரியங்களில் ஈடுபடவேண்டும். அதில் ஒன்று விளைவுப் பெருக்கம். அதனைப் பெருக்கி மக்கள் சுத்த சைவர்கள் ஆக்க நாம் முயலுவோமாக.

———

புர. சுவாமிநாதன், எம்.ஏ., எல்.டி. போன்ற அறிவுடைப் பெருமக்கள் பலர் பங்கு கொள்வர்.

குன்றக்குடி, திருப்புத்தூர், திருக்கொடுங் குன்றம், திருப்பெருந்துறை முதலிய திருத்தலங்களுக்கு யாத்திரை போய்க் கூட்டு வழிபாடு நடாத்த ஏற்பாடு செய்யப்படும்.

தாய்மார்களுக்குத் தனி வசதி உண்டு.

இவ்வகுப்பில் சேர விரும்பும் அன்பர்கள் நுழைவுக் கட்டணமாக ரூ. 2-ம் உணவு வசதிவேண்டுவோர் ரூ. 10-ம் முன்பணம் செலுத்துதல் வேணடும்.

இதில் கலந்து கொள்ள அவாவுறும் அன்பர்கள், செயற்குழுச் செயலாளர், திரு. டாக்டர்-அளகப்ப அண்ணுமலே, M. D. H. Mont. Dip., (சாரணத் தலேவர், "சேவா", மார்க்கண்டன் தெரு, கோட்டையூர்) அவர் கட்கு விரைவில் விண்ணப்பித்துப் பதிந்து கொள்ளவும்.

வெளி வட்டங்களிலிருந்து வருகை புரியும் அன்பர்கள் செயற்குழுச் செயலாளருக்கு முன் கூட்டியே அறிவித்தால் வையக்கரைக்குப் போக வழித்துணே அனுப்பப்படும்.

சிவநேயச் செல்வர்கள் பலர் இந்நல்வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு பலன் பெறுவர் எனப் பெரிதும் எதிர் பார்க்கிறேம்.

சமாஜ மே திங்கட் கூட்டம்

14-5-51 திங்கள் மாலே 4-30 மணிக்குத் திருநாவலூர் சுந்தரர் செந்தமிழ்க் கழகச் சார்பில் திரு. ப. தி. சோ. குமாரசாமிச் செட்டியார் அவர்கள் தலேமையில் நிகழ்வுறும்.

செய்திகள்

திருநாவலூர் சுந்தரர் செந்தமிழ்க் கழகத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா, கர ஆண்டு, சித்திரைத் திங்கள், 30, 31 நாட்களில் (13, 14-5-51) அண்ணுமலேப் பல்கலேக் கழகத்துக் கூட்டுத் தமிழ்ப் பேராசிரியர் - திருவாளர் - லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலேமை யிலும், குடந்தை - சிவனடியார் திருக்கூட்டத் தலேவர் - திருவாளர் - ப. தி. சோ. குமாரசாமிச் செட்டியார் அவர்கள் தலேமையிலும் நடைபெறும்.

விருதுநகர் சைவ சித்தாந்த கழகத்தினரால் 30-4-51ல் திருநாவுக்கரசு நாயனுர் விழா கொண்டாடப்பட்டது. அதுகாலே, குன்றக்குடி திருவண்ணுமலே ஆதீனம் சின்னப்

பட்டம் - திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி அருணசல தேசிக சுவாமிகள் தலைமையில் கழக நூல்நிலையத் திறப்பு விழாவும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் ஏப்பிரல் 27, 28, 29 நாட்களில் நான்காம் தமிழ்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியாசாலையின் வெள்ளிவிழா 1-5-51 அன்று, அருட்டிரு. தெய்வசிகாமணி அருணசலதேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்கள் வித்தியாசாலையை நிறுவிய பெரியார் திரு. பழனியப்ப செட்டியாரின் சிறந்த அறத்தொண்டைப் பாராட்டிப் பேசினர்கள்.

விருத்தாசலத்தில் முறைப்படி நடக்கும் வார வழிபாட்டில் 5 - 5 - 51-ல் திருவாளர் - S. வேலாயுதன், S. இராமலிங்கம் அவர்கள் 'மூர்த்திநாயனர்' சிறப்பை விளக்கமாகப் பேசினர்கள்.

ஈரோடு 7-வது திருமுறை, 6-வது திருக்குறள், 5-வது சைவ மாதர் மகாநாடுகள் 20, 21, 22-4-51 நாட்களில், 'ஈரோடை அப்பர்' திருக்கோயிலில் அமைக்கப்பெற்ற 'வன்தொண்டர்' காவணத்தில் சிறப்பாக நடைபெற்றன.

மதிப்புரை

இலங்கை அரசினர் சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பெற்ற 'நவ இலங்கை' எனும் நூல் வரப்பெற்றேம். அழகிய கடிதத்தில் அநேக படங்களுடன் வெளிவந்துளது. இலங்கையின் சரித்திரம், தற்போதுள்ள நிலைமை, சமூகப் பொருளாதாரப் புள்ளி விவரங்கள், சிறப்பாகப் பார்க்க வேண்டிய இடங்கள் முதலியவை அடங்கியுள்ளன. இலங்கை செல்வோர்க்கு இந்நூல் பெரிதும் துணைசெய்யும். அதனுடன் அனுப்பப்பட்ட இலங்கா விவசாய மஞ்சரி - 1951 விவசாயிகளுக்குப் பயன்படும் பல விஷயங்களைக் கொண்டிருக்கிறது.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.